பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்,பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 10 ஞாயிற்றுக்கிழமை (22-02-2004) தொலைபேசி - 2223378 ஒலி 65

### கடை உரிமையாளரை சுட்டு விட்டு

## ஒரு கோடி ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிப்பு

### சாவகச்சேரியில் நேற்று திகில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இராணுவச் சீருடை அணிந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இனந் தெரியாத நபர்கள் இருவர் நகைக் கடை உரிமையாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அவரிடமிருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான நகைகளைத் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இத் துணிகரமான கொள்ளைச் சம்பவம் சாவகச்சேரி டச்சு வீதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

சாவகச்சேரி நகரிலுள்ள வீஎம்.கே நகைக் கடை உரிமையாளரான சண்முகம் சதீஸ்குமார் (வயது 29),தனது கடைக்குக் கொண்டு செல்வதற்கான பெருமளவு நகையுடன் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற சமயம் எம்.டி.90 மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்கள் திடீரென அவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தால் நிலை தடுமாறிய கடை உரிமை

(12ஆம் பக்கம் பார்க்க)

### மகேஸ்வரன் ஐ.தே.கவில் கொழும்பில் போட்டி

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முன்னிலையில் நேற்று வேட்பாளர் நியமனப் பத்திரத்தில் தி.மகேஸ்வரன் ஒப்பமிட்டுள்ளார்.(ம)

### ஐ.ம.சு.முன்னணி ஆட்சி அமைத்தால்

# தனியாருக்கு முன்னுரிமை

# யுத்த நிறுத்தம் தொடரும்

(நமது நிருபர்)

**தாராள கலப்புப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் நாட்டை அபிவிருத்தி செய்யும் பாரிய பொறுப்பை தனியார் துறையினரிடம் ஒப்படைப்பதே தனது பொருளாதாரக் கொள்கை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்று அறிவித்துள்ளது.**

பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று வர்த்தக சமூகத்தின் மத்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொருளாதார கொள்கை சம்பந்தமான அறிவித்தலை வெளியிட்ட போதே அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய முன்னணியின் பொருளாதாரக் கொள்கை, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான கொள்கை ஆகியவற்றை வர்த்தக சமூகத்தினருக்கு விளக்கும் முகமாக நேற்று இச் சந்திப்பு இடம் பெற்றது.

வர்த்தகப் பிரமுகர்களுடனான சந்திப்பில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் (12ஆம் பக்கம் பார்க்க)

### வவு.,மட்டு. மாவட்டங்களில் புளொட் போட்டியிடும்

(வவுனியா)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் புளொட் அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களிலும் போட்டியிடவுள்ளதாக அதன் தலைவரும், முன்னாள் வன்னி மாவட்ட எம்.பியுமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பகீரதன் தலைமையிலும் நங்கூரம் சின்னத்தில் போட்டியிடப் போவதாகவும் வேட்பு மனுக்கள் நாளை திங்கட்கிழமை தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### பொதுத் தேர்தலில் போட்டியிட அனுருத்த ரத்வத்தைக்குத் தடை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை போட்டியிடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தடை உத்தரவு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் அனுருத்த ரத்வத்தை போட்டியிட்ட கண்டி மாவட்டத்திலேயே தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டதாக அங்கு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து முன்னாள் எம்.பிக்கள் இருவர் நீக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்வர் இஸ்மாயில், எச்.எம்.எம் ஹரிஸ் ஆகிய இருவரும் நீக்கப்பட்டுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உபதலைவராக அன்வர் இஸ்மாயிலும், பொருளாளராக எச்.எம்.எம் ஹரிசும் பதவி வகித்து வந்தார்கள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று காலை கூட்டிய கட்சியின் அதியுயர்பீட கூட்டத்தில் இவ்விருவரையும் கட்சியிலிருந்து நீக்குவது என தீர்மானிக்கப்பட்டது. கட்சியின் ஒழுக்கத்தையும், கட்டுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

### ரணில்-பிரபா ஒப்பந்தத்தால் முஸ்லிம்களுக்கு பெரும் பாதிப்பு

### ஜனாதிபதியுடன் இணைந்த அதாவுல்ல கருத்து

(நமது நிருபர்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் நாட்டில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கரத்தைப் பலப்படுத்துமாறு அஷ்ரப் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான அதாவுல்ல நாட்டிலுள்ள சகல தேசாபிமானப் பிரஜைகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் அமைச்சர் அதாவுல்ல மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு போதிய அரசியல் பலத்தை இத் தேர்தலில் நாம் அளிப்பதன் மூலம் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், விடுதலைப் புலிகளும் சமாதானத்தின் பெயரால் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையினால் முஸ்லிம் மக்களின் சொத்துக்களுக்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பீடத்திற்கு அறிவித்திருந்த போதும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் சுயநலத்துடன் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காது விட்டனர்.

இந்நிலையில் சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு ஜனாதிபதியின் தலைமையிலான

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.தே. கட்சியின் வேட்பு மனுக்கள் 23,24ஆந் திகதிகளில் தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி 23, 24 ஆம் திகதிகளில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் என்று கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு உட்பட சகல மாவட்டங்களிலும், தமது கட்சியின் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு பெரும்பாலும் பூர்த்தியடைந்திருப்பதாக குறிப்பிட்ட அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி கண்டியில் ஆரம்பிக்கப

(12ஆம் பக்கம் பார்க்க)

## எமது கட்சியின் 10 கேள்விகளுக்கு ஜனாதிபதி தக்கவிடையளிப்பாரா?

### ஐ.தே.மு. செயலாளர் சவால்

(கொழும்பு)

ஐதேமு. பொதுச் செயலாளர் செனரத் கப்பு கொட்டுவ ஜனாதிபதியிடம் 10 வினாக்கள் அடங்கிய வினாக் கொத்து ஒன்றை முன்வைத்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் நடவடிக்கைகள் உண்மையிலேயே கண்டிப்பானவை என நம்ப வேண்டுமெனில் மக்களின் சார்பில் ஐ.தே.க. கோரும் பின்வரும் 10 கேள்விகளுக்கும் ஜனாதிபதி தக்க விடையளிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

1) 2003 நவம்பரில் அமைச்சுக்களை பொறுப்பேற்பதற்கு முன்னர் பிரதமருடன் இது பற்றி கலந்துரையாடலையோ அல்லது அவற்றில் நிலவும் அதிருப்தி பற்றியோ பிரதமருக்கு தெரிவிக்கப்படாதது ஏன்?

2) உண்மையிலேயே நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடும்,இறைமையும், அச்சுறுத்தலுக்குள்ளாகிறது

(12ஆம் பக்கம் பார்க்க)

### க.தொ.ச.சம்மேளனம் சங்கரியுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியை யாழ. மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகள் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் பின்னர் கடற்றொழிலாளர் சம்மேளனம் சங்கரிக்கு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழர் போராட்ட வரலாற்றில் இதுவரை 18 ஆயிரம் வீரர்களையும் 82 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களையும் ஈகம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பல வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற ஆசிரியரி னால் ஏராளமான பயிற்சிகளு டன் (இருபது வருட வினாத் தாள் உட்பட) மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். சந்திப்பு தினசரி 3.00 மணிக்குப் பின்பு மட்டும். R.பாலசுப்பிரமணி யம் B.Sc (cey) Dip-in-Ed 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (8279)

## மாணவன் படுகாயம்

(பருத்தித்துறை)

மந்திகையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் படுகாயம் அடைந்துள்ளான். பாடசாலைக்குச சென்றபோது எதிரே வந்த மோட டார் சைக்கிளுடன் ஏற்பட்ட விபததில் பேரின்பநாயகம் டிலக்ஷன் (வயது 8) என்பவரே தலையில் படுகாயம் அடைந்தவராவார்.

இவர் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட டுள்ளார். (ந-52)

# அரசாங்க சேவை ஆணைக்குழுவில் சேர்க்கப்பட்டவர்களின் சேவை

## நிரந்தரமாக்குவதற்கு ஜனாதிபதி எதிர்ப்பு

(கொழும்பு)

அமைச்சர்களின் அரசாங்க சேவைக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் சேவை யை நிரந்தரமாக்குவது தொடர் பாக அமைச்சரவையில் சமர்ப் பிக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க கடும் எதிப்புத் தெரிவித துள்ளார்.

அமைச்சர்களின் சேவைப் பிரிவில் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவை யாற்றும் ஊழியர்களை நிரந்த ரமாக்குவது தொடர்பாக அமைச்சரவையில் அண்மை யில் பிரேரணை ஒன்று முன்வைக் கப்பட்டது. இதனையடுத்தே ஜனாதிபதி குமாரதுங்க அமைச் சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி பிரேரணைக்கு எதிர்ப் புத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களின் சேவைப் பிரிவில் இவ்வாறு ஊழியர் களை நிரந்தரமாக்குவது ஊழி யர்களை புதிதாக சேர்த்துக் கொள்ளும் நட வடிக்கைகளுக் குப் புறம்பானது எனக் குறிப் பிட்ட ஜனாதிபதி,

இது தொடர்பாக அரச நிர் வாக அமைச்சினால் பிரதமரின் செயலாளர் ஊடாக அமைச்சர் களின் செயலாளர்களுக்கு 2001 ஆம் ஆண்டு அனுப்பப் பட்ட அறிவுறுத் தல் கடிதத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக் கின்றதாகவும் சுட்டிக் காட்டி னார்.

இவ்வாறான பதவிகள் அமைச்சர் ஒருவர் அல்லது பிரதி அமைச்சர் என்போர் பதவி யில் இருக்கும் காலம் வரையுமே செல்லுபடியூகும். ஆனால் செயற்படும் அமைச்சரவையி லுள்ள அமைச்சர் ஒருவரின் பதவி வெற்றிடமான பின்னரும் அமைச்சில் கடமையாற்றும் ஊழியர்கள் நேர் எதிரான வித மாக இருக்கின்றனர்.

இந்தத் தீர்மானம் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி பாராளு மன்றம் கலைக்கப்பட்டு தேர்த லுக்கான திகதி நிர்ணயிக்கப் படுவதற்கு முன்னர் எடுக்கப் பட்டது.

எவ்வாறாயினும் அரச சேவையில் புதிதாக ஆட்க ளைச் சேர்த்துக் கொள்வது பதவி உயர்வுகள் வழங்குவது தொடர்பான பொறுப்பு அரசியல் அமைப்பின் 17வது திருத்தத் திற்கு அமைய அரச சேவை ஆணைக்குழுவிடமே இருக்கின் றது.

இந் நிலையில், நான் பங் கேற்காத அமைச்சரவைக் கூட்ட மொன்றில் முன்வைக்கப்பட்ட இந்தப் பிரேரணையை அங்கீ கரிக்கவேண்டாம் என கேட்டுள் ளதையும் பொருட்படுத்தாது அமைச்சரவை அங்கீகரித்துள் ளது. இதனால் நான் முழுமை யாக இந்தப் பிரேரணையை எதிர்க்கின்றேன் என்று கூறியுள் ளார். (யே-61,10)

# விடுதலைப்புலிகள் எதற்கும் தயார் நிலையிலேயே உள்ளனர்

(அம்பாறை)

யுத்தமாக இருந்தாலும் சரி சமாதானமாக இருந்தாலும் சரி அவற்றை எதிர்கொள்ளப் புலி கள் என்றுமே தயாராக உள்ள னர் என விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் படை அணித்தளபதி நிலாவினி தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட ஆலை யடி வேம்பு தர்மசங்கரி விளை யாட்டு மைதானத்தில் தமிழின உயிர்க் கொலை நாள் அனுஷ் டிக்கப்பட்டது. நேற்று முன் தினம் நடைபெற்ற இந்நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரை யாற்றிய அவர்,

ஜனாதிபதிக்கும் பிரதமருக் கும் இடையிலான அதிகார இழுபறியால் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடைபெறவுள் ளது. இவ்விருவருக்கும் தம் பதவி, அதிகாரங்களின்பாலுள்ள அக்கறை சமாதானத்தின்பால் இல்லை எனவே எமது உரிமையை வென்றெடுக்கும் பொறுப்பு எமது கையிலேயே உள்ளது.

எனவே எம்மீது திணிக்கப் பட்ட இனப் படுகொலைகள் வன் முறைகள் இனிமேலும் இடம் பெறாதிருக்க நாம் பலமாக அணிதிரள வேண்டியது எமது கடமை என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவ ட்டத் தளபதி சச்சி மாஸ்ரர் எந்த ஒரு சிங்கள அரசியல் தலைமைகளையும் நம்பி ஏமாற தமிழினம் தயாராக இல்லை. எமது இருப்பையும், எமது பாதுகாப் பையும், நாமே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்க தமிழ் மக்கள் தமது கடந்த கால அனுபவத்தை ஒரு பாடமாகக் கொள்ளுதல் அவசியம் என்றார்.

அதேவேளை இத் தினத்தை ஒட்டி நேற்று முன் தினம் அம்பாறை மாவட்டம் எங்கும் சோக தினம் அனுஷ்டிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே-64,4)

# சந்திரிகாவின் அரசியல் அஸ்தமிக்கப் போகின்றது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவின் அரசியல் வாழ்வு விரைவில் அஸ்தமிக்கப் போகி ன்றது என்கிறார் மத்திய பிராந் திய அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க.

குண்டகசாலையில் நடை பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரமுகர்களுக்கான கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

தற்போதைய அரசியல் யாப்பை உருவாக்கிய ஜே. ஆர்.ஜெயவர்த்தன அதன் மூலமாக எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை.

1948ம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட விகிதாசார தேர்தல் முறையினால் ஐக்கிய தேசியக்கட்சி சகல தேர்தல் களிலும் பாரிய வெற்றியீட்டும் என ஜே.ஆர்.ஜெயவர்த்தன எதிர் பார்த்திருந்தார்.

அவரது இநத எதிர்பார்ப்பு 1994ம் ஆண்டு தோற்கடிக் கப்பட்டது போன்று அதே அரசியல் அமைப்பின் பிரகாரம் செயற்படுகின்ற தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவுக்கும் மங்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என்றார். (யே-61,10)

# 'மாதிவல' வீட்டுத் தொகுதியிலுள்ள எம்.பிக்களை வெளியேறப் பணிப்பு

(கொழும்பு)

மாதிவல வீடமைப்புத் தொகு தியில் வசிக்கும் நூற்றுக்கும் அதிகமான அரச மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன் னாள் பாராளுமன்ற உறுப் பினர்களை அங்கிருந்து வெளி யேறுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது.

மாதிவல வீடமைப்புத் தொகு தியில் உள்ள 120 வீடுகளில் சுமார் 110 வீடுகளில் பாராளு மன்ற உறுப்பினர்களும் ஏனை யவற்றில் பாராளுமன்ற பணி யாளர்கள் மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் வசித்து வருகின்றனர்.

இந் நிலையில் புதிதாக அமைக்கப்படவுள்ள அரசாங் கத்தின் அதிகாரிகளுக்கு இவ் வீடுகள் வழங்கப்பட வேண்டியிருப்பதால் அவற் றைச் செப்பனிட்டுச் சீர்செய்ய வேண்டியுள்ளது. இதனால் இவ்வீடமைப்புத் தொகுதியில் குடியிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் குடும்பங் களை எதிர்வரும் ஒரு சில வாரங்களுக்குள் அங்கிருந்து வெளியேறுமாறு பாராளு மன்ற பொதுச் செயலாளர் பிரியானி விஜேயசேகர அறி வித்தல் விடுத்துள்ளார். (யே-18)

# இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படக்கூடிய சாத்தியமில்லை

## கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹெவ்டே தெரிவிப்பு

(கொழும்பு)

அரச படைகளுக்கும் விடு தலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக் கப்படக்கூடிய சூழ்நிலை இல்லை என இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டே தெரிவித்துள் ளார்.

அரசு-புலிகளுக்கிடையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டு இன்றுடன் 2வரு டங்கள் பூர்த்தியாகின்றது. இந் நிலையில் இலங்கையின் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திரத் தன்மை குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரிவித்த அவர்;

இலங்கை அரசாங்கத்திற் கும் தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இடையே 2001ம் ஆண்டு மாசி மாதம 22ம் திகதி யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது.

இதன்பின் இவ் ஒப்பந்தம் குழப்பமடையக் கூடியளவு பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. எனினும் இரு தரப்பும் மன உறு தியுடனும் விட்டுக் கொடுப்பு களுடனும் செயற்பட்டன. இதனால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் முறிவடையக் கூடிய நெருக்கடி யான காலத்தை இரு தரப்பும் கடந்துள்ளது.

இதற்கு சர்வதேச ஆதரவும் பக்க பலமாக இருந்துள்ளது. அத்துடன் போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவாக செயற் பட்டு யுத்த நிறுத்தம் சரிவரக் கடைப்பிடிக்கப்படுவதற்கு நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாநது, ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் ஆற்றிய பங்கும் குறிப்பிடப் பட வேண்டிய ஒன்றாகும் என்றார்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆட்கடத் தல், ஆட்சேர்ப்புப் போன்ற யுத்த நிறுத்த மீறல்களும் அரச படைத் தரப்பினருக்கு எதிராக அச்சுறுத் தல், மிரட்டல்கள் போன்ற யுத்த நிறுத்த மீறல்களும் முன் வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திரத்தன்மை குறித்து தான் திருப்தி அடைவ தாகவும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (யே-4)

## கௌரவிப்பும் பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

2003 ஆம் ஆண்டு நடை பெற்ற 5-ந் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த J/108 நல்லூர்ப் பிரிவு மாணவர்க ளின் கௌரவிப்பும் பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று காலை 10 மணிக்கு ஸ்ரீமுரு கன் ச.ச.நிலையத்தில் நல் லூர் கிராம அபிவிருத்திச் சங் கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. (த)

## படையினர் வளர்க்கும் நாய்களால் தொல்லை

(மூளாய்)

பொன்னாலைப் பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படை யினர் வளர்க்கின்ற நாய்கள் அப்பகுதியில் உள்ள கால் நடைகளை கடித்து காயப் படுத்தி வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

காயப்பட்ட கால்நடைகள் சில நாட்களின் பின்னர் இறந்து விடுவதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் கால்நடைகளை வளர்க்கும் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள் கின்றனர். (த-50)

சங்குநாதம்

வலம்புரியின் வாரமலர் சங்கு நாதம் Sankunatham (23-29 பெப்ரவரி 2004)




சூடு பிடிக்கிறது தேர்தல்களம் - கோவையூர் ஜெயன்

தேர்தல் ஆடுகளத்தில் காயாக சுமதிபால பழமாக சோமவன்ச - பவானி

வாழ்வை வளம்படுத்த துரைமுருகர் எழுதும் என் சோதிடம்

கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள் (தொடர்கதை)

வியாசரின் பதில்கள்

ஆவடி மாநாடு

சினிமாச் சிதறல்

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்


வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா. 16.00

# கிரிக்கெற் உலகின் இரு ஜாம்பவான்கள்

கிரிக்கெற் உலகில் சிறந்த வீரர்களை, சாதனைகளை நிலை நாட்டியவர்களை என்றுமே மறக்க



பழைய சாதனைவீரர்

முடியாது. அந்த வகையில் கிரிக்கெற் உலகில் இருவர் ஜாம்பவான்கள் எனக் கருதப்படுகின்றனர்.

இந்த இரண்டு நட்சத்திரங்களில ஒன்று பிரகாசித்துவிட்டு மறைந்துவிட்டது. மற்றொரு நட்சத்திரம் இன்றும் பிரகாசித்து வருகின்றது.

இந்த இரு ஜாம்பவான்களினதும் சாதனைகள் என்றுமே நிலைத்திருக்கக் கூடியவை. இவர்கள் துடுப்பாட்டத்தில் எவராலும் முறியடிக்கப்படாத சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

இந்த ஜாம்பவன்களில் ஒருவர் தான் அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த டொனால்ட் பிரட்மன். கிரிக்கெற் உலகில் அதிசிறந்த வீரர்கள் அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியில் உள்ளனர் என்பதை சர்வதேச கிரிக்கெற் உலகிற்கு எடுத்துக்காட்டியவரே பிரட்மன் தான்.

கிரிக்கெற் உலகில் இவரது சாதனைகள் எவராலும் முறியடிக்கப்பட முடியாதவை. கிரிக்கெற் உலகில் இந்தியாவை இமயத்தின் உச்சிக்குக் கொண்டு சென்றவர் கிரிக்கெற் வீரர் டெண்டுல்கர். இன்றும் இவர் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறார். இந்த இரு வீரர்களும் மைதானத்திற்குள் நுழைந்தால் ரசிகர்கள் அடையும் மட்டற்ற மகிழ்வுக்கு அளவே கிடையாது.

1947 ஆம் ஆண்டுகளில் கிரிக்கெற் உலகம் பிரட்மனை எவ்வளவு நேசித்ததோ அந்த அளவிற்கு சச்சின் டெண்டுல்காரும் சர்வதேச கிரிக்கெற் ரசிகர்களின் உள்ளங்களில் அசையாத இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

கிரிக்கெற்றின் ஆரம்ப காலத்தில் ஆங்கிலேய பந்துவீச்சாளர்களுக்கு சிம்ம சொற்பனமாக விருந்து அவர்களை திணறடித்தவர் பிரட்மன்.

இந்தியரை அடிமைப்படுத்தி அவர்களுக்குச் செய்த அட்டூழியங்களுக்கு ஆங்கிலேயரைப்



தனது 90 வது பிறந்தநாளில் சச்சினுடன் பிரட்மன் காணப்படும் காட்சி

பழிவாங்கும் நோக்கமே பிரட்மனின் அட்டகாச துடுப்பாட்டத்தில் இருந்ததாக ரைம்ஸ் ஒவ் இந்தியா **(Times of india)** என்ற இதழின் கிரிக்கெற் ஆய்வாளர் கே. என்.பிரபு விமர்சித்துள்ளார்.

1947 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரட்மனின் அட்டகாசத் துடுப்பாட்டத்தைக் கண்டு களிக்க அவரின் விஸ்வருப தரிசனத்தைக்காண இந்திய ரசிகர்கள் காத்திருந்தனர். ஆனால் இந்திய ரசிகர்களின் இந்த ஆசையைப் பிரட்மனால் நிறைவேற்ற முடியாமல் போனது. அவர் ஒரே ஒரு முறை இந்தியா வுக்கு வருகை தந்த போதிலும், சில மணிநேரங்கள் விமானநிலையத்தில் தரித்து நின்று விட்டுச் சென்றுவிட்டார்.

தன்னுடைய சில தவறுகளுக்காக பிராயச்சித்தம் தேடுவது போல் இளம் கிரிக்கெற் வீரர் சச்சின மீது பிரட்மன் ஆர்வம் காட்டினார்.

தனது 90 வது பிறந்தநாள்

**"என்னைப் பிரதி பலிக்கும் ஒரே துடுப்பாட்ட வீரர் சச்சின் தான்" என ஒரு பேட்டியின் போது பிரட்மன் கூறினார்.**

விழாவில் கலந்து கொள்ளும் படி சச்சினுக்கு பிரட்மன் அழைப்பு விடுத்தார். அங்கு அழைக்கப்பட்ட ஒரேஒரு கிரிக்கெற் வீரர் சச்சின் என்பது சச்சினுக்கும் இந்தியாவுக்கும் பெருமையைத் தேடிக் கொடுத்தது. இவர்கள் இருவரும் பின்னங்காலில் சென்று **OFF** திசையில் பந்தை விளாசுவதில் நிபுணர்கள். ரிவர்ஸ் ஸ்வீப், எக்ஸ்ட்ரா கவருக்கு மேல் அடிக்கும் டிரைப் இரண்டுமே இவர்கள் இருவருக்கும் கைவந்தகலை. இந்த இரண்டு ஆட்டமுமே நவீன ஆட்டத்தின் புதிய யுக்திகள். சூழற் பந்து வீச்சை எதிர் கொள்வதில் பிரட்மன் நிபுணர். ஆனால் சச்சினோ இதில் வீக்.

ஒருநாள் போட்டிகளில் ஊறிததிளைத்த டெணடுல்காரிடம் மட்டையைச் சுழற்றிப் பந்தை எல்லைக் கோட்டுக்கு வெளியே விரட்டுவதில் உள்ள உற்சாகம் பிரட்மனிடம் இல்லை. ஆனால் விரைவில் 3 இலக்கத்தைத் தாண்டுவதில் அவருக்கு நிகர் அவரே. சச்சின் டெண்டுல்கரின் கிரிக்கெற் பிரவேசத்துக்கு முன் இந்தியா இரண்டு வகையான துடுப்பாட்ட வீரர்களைத்தான் பார்த்தது.

இதில் ஒரு ரக வீரர்கள் ஓட்டத்தை நிதானமாக எடுப்பவர்கள். இந்த ரக வீரர்களுக்கு எடுத்துக்காட்டாக கவாஸ்கர், ரவிசாஸ்திரி போன்றோரைக் குறிப்பிடலாம்.

மற்றைய ரக வீரர்கள் துடுப்பு மட்டையைச் சுழற்றி 10 அல்லது 20 நிமிடங்களில் ஓட்டங்களைக் குவித்துவிட்டு பவிலியனுக்குத் **(pavilion)** திரும்புவார்கள். இதற்கு ஸ்ரீகாந்தை உதாரணம் காட்டலாம்.

ஆனால், டெஸ்ட் போட்டியில் ஒரேஒருநாளில் 300 ஓட்டங்களைக் குவித்த பெருமைக்கும், சாதனைக்கும் உரியவர் பிரட்மன்.

களத்தடுப்பாளர்கள் இல்லாத இடத்திற்கு பந்தினை விளாசித்தள்ளுவதில் பிரட்மன், சச்சின் ஆகிய இருவருமே திறமைசாலிகள்.

ஆட்டம் பற்றி அணுகு முறையிலும், ஒரே மாதிரியாக துடுப்



புதிய சாதனைவீரர்

பெடுத்தாடுவதிலும் இருவருமே ஒரே தோற்றப்பாட்டை உடையவர்கள். பந்து வீசுவதிலும் இருவரும் திறமைசாலிகள் தான். இருவருமே சுழல் பந்து வீச்சாளர்கள்.

பிரட்மன் சுயநலக்காரர். அணியின் நலனைவிட தனது நலனையே பெரிதாக நினைப்பவர் என்ற குற்றச்சாட்டு இருந்தது.

ஆனால், ஈடிணையற்ற துடுப்பாட்ட வீரன் என்பதில் இருவேறு அபிப்பிராயம் எவரிடமும் இல்லை.

1928 ஆம் ஆண்டு முதல் 1948 வரை ஆடிய பிரட்மனின் சாதனையை எவராலும் எட்டிப்பிடிக்கக் கூட முடியாது. டெஸ்ட் ஆட்டங்களில் 80 போட்டிகளில் விளையாடி 29 சதங்கள் உட்பட 6,996 ஓட்டங்களைப் பெற்றவர் இவர். இந்த 29 சதங்களில் 12 இரட்டைச்சதங்களும், 2 முச்சதங்களும் அடங்கும். கிரிக்கெற் சாதனையில் இரண்டு தடவைகள் 300 ஓட்டங்கள் எடுத்த பெருமையும் அவருக்கே உரியது. அதி கூடுதலான ஓட்டமாக 334 ஓட்டங்களை அவர் பெற்றுள்ளார்.

இவரது சராசரி டெஸ்ட் ஓட்டம் 99.94 ஆகும். கடைசி ஆட்டத்தில் 4 ஓட்டங்கள் பெற்றிருந்தால் இவரின் சராசரி ஓட்டம் 100 ஆக இருந்திருக்கும். ஆனால் கடைசி

**தொகுப்பு: நோயல்**

ஆட்டத்தில் ஓட்டம் எதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தமை அவர் அந்த இலக்கை அடைவதற்குத் தடையை ஏற்படுத்தியது.

டெஸ்ட் ஆட்டத்தில் திறமைசாலியாக அக்கால கட்டத்தில் பிரட்மன் இருந்தது போல், இக்கால கட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் இருக்கிறார். சச்சின் இதுவரை 31 சதங்கள் பெற்றுள்ளார். ஒருநாள் போட்டியைப் பொறுத்தவரை சாதனைக்குரிய வீரராக சச்சின் காணப்படுகின்றார். இவர் ஒருநாள் போட்டியில் 10,000 ஓட்டங்களைத்தான் தாண்டியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் 10,000 ஓட்டங்களைத் தாண்டியவர் என்ற பெருமை அவருக்கே உரியது. எனினும், சச்சினால் பிரட்மனின் சராசரி ஓட்டத்தை எட்ட முடியாது என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

பிரட்மன் ஓய்வு பெற்றபோது ''தீர்க்கவே முடியாத ஒரு பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடி இனிப் பந்து வீச்சாளர்களுக்குக் கிடையாது'' என இங்கிலாந்து நாட்டின் கிரிக்கெற் வர்ணனையாளர் ஜோன் ஆலர்ட் **(John Allert)** கூறியிருந்தார். இதற்குப் பதிலளித்த பிரட்மன் என்னைப் போன்ற சச்சின் இனிப் பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொர்ப்பனமாக விளங்குவார் எனத் தெரிவித்தார். கிரிக்கெற் உலகில் பிரட்மன் ஏற்படுத்திய சாதனைகளைக் கௌரவிக்கும் முகமாக அவருக்கு சேர் **(Sir)** பட்டம் வழங்கப்பட்டது. இரண்டு வருடங்களுக்கு முன் பிரட்மன் என்ற சாதனைப் புயல் தனது வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டமை கிரிக்கெற் ரசிகர்களை ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியது.

சச்சின் என்ற புயல் தனது கிரிக்கெற் பயணத்தைத் தொடர்கிறது.

# தலைமைத்துவம் மிக்க சமுதாயத்தை உருவாக்கும் சாரணியம்

**சாரணியத்தின் தந்தை பேடன் பவலின் ஜனனதினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது (ஆ-ர்)**

1907 ஆம் ஆண்டு தந்தை பேடன பவல் பிரபுவால் ஆரம்பிக்கப்பட்ட சாரணர் இயக்கமானது தற்போது



சகல இயக்கங்களிலும் முன்னோடியாகத் திகழ்கின்றது. இவ்வியக்கம் உலகெங்கும் பரந்து சாதி, மத, இன, மொழி என்ற பேதங்களைக் கடந்தது. உலகில் உள்ள எல்லா சாரணர்களும் சகோதரர்களாகத் திகழ்கின்றனர். இக்கால இளம் சிறார்களும், இளைஞர்களுமே நாளைய தலைவர்களாக விளங்குவார்கள். இவ் இளம் தலைமுறையினரை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், பண்பிற் சிறந்தவர்களாகவும், சேவை மனப்பாங்குடையவர்களாகவும் உருவாக்கும் உன்னத பணியினை மாற்றுவதே சாரணியமாகும்.

சாரணியம் என்பது ஒரு வாழ்க்கை முறைமை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைக் கடைப்பிடித்து சில குறிப்பிட்ட திறன்களை சாரணியம் மூலம் பெற்றுக்கொண்டு வாழ்க்கையைச் செம்மைப்படுத்த முடியும். அந்த வகையில் சாரணியமானது கல்வியினை மேம்படுத்தும் ஒரு கருத்து மிக்க படிக்கல் ஆகும்.

சௌக்கியம் என்ற ரீதியில் சாரணியத்தில் தேகப் பயிற்சி, அணிநடை, ஒழுக்கம் என்பன போன்ற பயிற்சிகள் உள்ளன. இவை உடல் நலக் கல்வியுடன் தொடர்பு படுகின்றன. எந்த மாணவனும் தான் சமூகத்தில் உயர்ந்த சிறந்த பண்புள்ள குடிமகனாகப் பயிற்சி பெறவேண்டும் என்று விரும்பியே சாரணியத்தில் இணைகின்றான்.

சாரணியத்தின் மூலம் பாடசாலையிலோ அல்லது வெளியிலேயோ கிடைக்கமுடியாத அனுபவங்களையும், பயிற்சிகளையும் ஒரு சாரணன் பெற்றுக்கொள்கிறான்.

அத்துடன், சாரணிய ஜம்போறி நிகழ்வுகள், வெளிக்களப் போட்டிகள் மூலம் பல்வேறு பட்ட சமூகங்களுடனும் பழகுகின்ற வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சாரணியத்தில் தலைமைத்துவம் என்பது நாடகம், ஆடல், பாடல், அலங்கார வேலைகள், விளையாட்டு, கலைத்திறன், முதலுதவி போன்ற சகலதுறைகளையும் உள்ளடக்கியதே. இதனால் ஒரு மாணவன் சாரணன் ஆகும் போது சகல துறைகளையும் கறறு அதனுடன் அனுபவித்து வருகிறான். இதனால் அம் மாணவனுக்கு ஆளுமை விருத்தி உருவாகிறது. இவ் ஆளுமையால் சிறந்த தலைவன் ஆகிறான்.

எங்கும் தலைவர்கள், எதிலும் தலைவர்கள் உள்ளனர். ஆனால் சிறந்த தலைவர்களைக்காண்பது அல்லது சிறப்புத் தலைமைத்துவத்தைக் காண்பது அரிதாகவே உள்ளது. சிறந்த தலைமைத்துவம், சிறந்த தலைமைப் பண்பு ஒருவனுக்கு வரவேண்டுமாயின் அடிப்படைத்தத்துவம் விளங்கியே ஆகவேண்டும்.

ஒரு விளையாட்டு வீரன் விளையாட்டுத் துறையில் தலைவனாகவும், கல்விமான் கல்வித் துறையில் தலைவனாகவும்

**திருக்குமார் – சடூபன்**

வரமுடியும். இதற்கு அடித்தளமிடுவதாக சாரணியம் விளங்குகின்றது.

சமூகத் தேவைப்பாடுகளை வழங்கும் எந்த இடத்திலும், தன்னை இனம் காட்டும் ஆளுமை பொருந்திய, உதவி கோரப்படும் இடத்தில் தியாக சிந்தனையுடன் உதவி வழங்கவல்ல தலைமைப் பண்புகள் சிறந்த ஒரு புத்தூக்க சமூகத்தைக் கட்டியெழுப்பும் சாரணியத்தைத் தந்தை பேடன் பவல் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்துத்தன் இலட்சியத்தை அடைந்தது போல், அதே இலட்சிய வாழ்க்கையை நாமும் அடைந்து சாரணியத்தை மென்மேலும் வளரச் செய்து நாமும் வளர்வோமாக. □

## பேடன் பவல் தினம்

(யாழ்ப்பாணம்)

சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவல் தினம் நாளை திங்கட்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாரணர் தலைவர் ந.பவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மாவட்ட ஆணையாளர் சு.சிவபாதரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார் ஆசிரியர் ஆறுதிருமுருகன் ஆசியுரை வழங்குவார். (ந)

# தமிழீழத் தேசிய விளையாட்டில் மாவீரர் நினைவாகக் கேடயங்கள்

தற்பொழுது கிளிநொச்சியில் நடைபெற்றுவரும் 3வது தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் நடைபெறவிருக்கின்ற பிரதான சுற்றுப்போட்டிகள் பல மறைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் மற்றும் மாவீரர்களின் ஞாபகார்த்தமாக நடைபெறவிருக்கின்றன. அவை வருமாறு:

லெப். கேணல் விக்ரர் ஞாபகார்த்த வெற்றிக்கேடயம் - உதைபந்தாட்டம் (ஆண்)

லெப். கேணல் புலேந்தி அம்மான் ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் - கிளித்தட்டு (ஆண்)

லெப். கேணல் சந்திரன் ஞாபகார்த்த வெற்றிக்கேடயம் - கபடி (ஆண்)

மேஜர் அல்பேட் ஞாபகார்த்த வெற்றிக்கேடயம் - கரபந்தாட்டம் (ஆண்)

கேணல் சங்கர் ஞாபகார்த்த வெற்றிக்கேடயம் - கிரிக்கெற் (ஆண்)

மேஜர் சோதியா ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் - வலைப்பந்தாட்டம் (பெண்)

கப்டன் அன்பரசி ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் - கிளித்தட்டு (பெண்)

கப்டன் திலகா ஞாபகார்த்த வெற்றிக்கேடயம் - கபடி (பெண்)

லெப்ரினன்ட் சதா ஞாபகார்த்த வெற்றிக்கேடயம் - கரப்பந்தாட்டம் (பெண்). (யே- 68)

# தெற்காசிய விளையாட்டு தெரிவுகள் சுகததாஸ அரங்கில்

தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் இலங்கை வீரர்கள் நேற்றும் இன்றும் சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும் நிகழ்வில் தெரிவு செய்யப்படவுள்ளனர். ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற்ற சுசந்திகா ஜெயசிங்ஹவின் தெரிவு உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாமபாத்தில் நடைபெறும் சார்க் போட்டியில் சுசந்திகா ஜெயசிங்ஹ முதற்தடவையாக 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளார். தமயந்தி, தர்ஷா, சிறியானி குலவன்ஷ, பிரசன்ன அமரசேகர ஆகியோர் சீரற்ற உடல்நிலை காரணமாக சார்க் போட்டியில் கலந்து கொள்ளப் போவதில்லையென் அறிவிக்கப்பட்டுள்ளது. (யே- 121)

# தேசிய விளையாட்டு விழாவின் 2ஆம் நாள் முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபெற்றுவரும் 3ஆவது தேசிய விளையாட்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள், நேற்றைய தினம் காலை ஆரம்பமாகித் தொடர்ந்தும் நடைபெற்றன.

மருதநகர் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வவுனியா மாவட்ட அணி, அம்பாறை மாவட்ட அணியை 7:1 என்ற கோல்கணக்கில் வெற்றியட்டியது. இதில், வவுனியா மாவட்ட அணி வீரர்களான அரவிந்தன் 4 கோல்களும், தவராசா 2 கோல்களும், ரூபன் 1 கோலும் போட்டு வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான தாச்சிப் போட்டியில், யாழ்.மாவட்ட அணி, மன்னார் மாவட்ட அணியை 18:3 என்ற எண்ணிக்கை அடிப்படையில் வெற்றியீட்டியது. பெண்களுக்கான தாச்சிப் போட்டியில், மட்டக்களப்பு மாவட்ட அணி சமூகமளிக்காததால், திருகோணமலை மாவட்ட அணிக்கு வெற்றி வாய்ப்பு வழங்கப்பட்டது.

பின்னர் இடம்பெற்ற பெண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணி, அம்பாறை மாவட்ட அணியை 47:11 என்ற எண்ணிக்கை அடிப்படையில் வெற்றியீட்டியது. ஆண்களுக்கான கபடிப் போட்டியில், அம்பாறை மாவட்ட அணி, கிளிநொச்சி மாவட்ட அணியை 31:27 என்ற எண்ணிக்கை அடிப்படையில் வெற்றியீட்டியது.

(யே-18)

# விளையாட்டு




ஆர்ஜென்டீனாவில் நடைபெறும் டெனிஸ் போட்டியில் ஸ்பெயினின் காலோஸ்மோயா ஒற்றையர் ஆட்டத்தில் தனது நாட்டு டேவிற் சஞ்சேஸை எதிர்த்தாடுவதைப் படத்தில் காணலாம்.

# இந்திய அணி வென்றது

டாக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் இந்திய அணி பங்களாதேஷ் அணியை 131 ஓட்டங்களால் தோற்கடித்தது. இதன் மூலம் இந்திய அணி சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குத் தகுதி பெற்றுள்ளது. 310 என்ற ஓட்ட இலக்குடன் ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 178 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்து தோற்றுப்போனது. முன்னதாக நிர்ணயிககப்பட்ட 50 ஓவர்களில் இந்திய அணி 7 விக்கெற்றுக்களை இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றது.

120 ஓட்டங்கள் குவித்து அற்புதமாக ஆடிய இந்தியாவின் சித்தார் பவன் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார். (யே-121)



ஐரோப்பிய கூடைப்பந்தாட்டக் கிண்ணத்திற்கான போட்டியில் ஒலிம்பியா அணியினர் அன்றிஜா சிசிக் அணியினரோடு மோதும் காட்சி. இப்போட்டிகள் சுலோவேனியாவில் நடைபெறுகின்றன.

# இலங்கை கிரிக்கெற் அணி சுப்பர் சிக்ஸில் நுழைந்தது

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்டவருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளில் சுப்பர் சிக்ஸ் போட்டிக்கு இலங்கை அணி தெரிவாகியுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஏ குழுவில் ராஜ்சாகிரி விளையாட்டு அரங்கில் நடைபெற்ற போட்டியில் இரண்டு ஓட்டங்களால் இலங்கை அணி தோல்வியடைந்த போதிலும் நிகர ஓட்ட வேக அடிப்படையில் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறும் வாய்ப்பு இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

இக்குழுவில் இடம்பெறும் அவுஸ்திரேலிய சிம்பாப்வே ஆகிய நாடுகளும் முதல் சுற்று முடிவில் இலங்கையுடன் புள்ளி நிலையில் சமமாக இருந்த போதிலும் அவுஸ்திரேலியாவினால் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாமல் போனது. நேற்றைய போட்டியில் இலங்கை அணியை 98 ஓட்டங்களுக்கு குறைவாக ஆட்டமிழக்கச் செய்தால் மட்டுமே அடுத்த சுற்றுக்குத் தெரிவாகும் வாய்ப்பு அவுஸ்திரேலியாவுக்குக் கிடைத்திருக்கும். எனினும் நேற்றைய போட்டியில் அவுஸ்திரேலியா பெற்ற 9விக்கெற் இழப்பிற்கு 186 ஓட்டங்கள் என்ற இலக்கிற்குப் பதிலளித்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் அவுஸ்திரேலியாவின் எதிர்பார்ப்பு முறியடிக்கப்பட்டது. இப்போட்டியில் 56 ஓட்டங்கள் பெற்றதுடன், 2 விக்கெற்றுக்களை வீழ்த்திய இலங்கை அணித் தலைவர் பர்வேஸ் மஹ்ரூப் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார். (யே-121)



அவுஸ்திரேலியாவில் நடைபெறும் பகிரங்க உலக நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த றொபேட் நியூபெரியும் ஸ்ரீபன் பாநெட்டும் பங்கெடுக்கும் காட்சி.

# மெய்வல்லுநர் போட்டிகள்

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை ரோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் த.சத்தியதாசன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.சி.மகேஸ்வரன் முதன்மை விருந்தினராகவும், தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.அருந்தவம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (யே-75)

× × ×

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு ஒற்றுமை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வீ.இந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் பிரதம விருந்தினராகவும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை, மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன், வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயுகன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், வெற்றிலைக்கேணி கிராம உத்தியோகத்தர் சோ.சிவலிங்கம், மருதங்கேணி காவல் பணிமனை பொறுப்பதிகாரி சி.சிவகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(யே-18)

# நியூஸிலாந்து அணியினர் தெ.ஆபிரிக்காவை வீழ்த்தினர்

மழை காரணமாக அணிக்கு தலா 38 ஓவர்கள் என மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெற் போட்டியில் ஸ்ரொக் ரைரிஸின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணியை நியூஸிலாந்து அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. வெலிங்டனில் ஈட்டப்பட்ட இந்த வெற்றியின் மூலம் 6 போட்டிகள் கொண்ட தொடரில் 2:1 என்ற நிலையில் நியூஸிலாந்து முன்னணி வகிக்கின்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 38 ஓவர்களில் 5 விக்கெற்றுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மைக்கல் பப்ஸ் 67 ஓட்டங்களையும், ஸ்ரொக் ரைரிஸ் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும், அணித் தலைவர் ஸ்டீபன் பிளமிங் 43 ஓட்டங்களையும் பிறையன் மக்மிலன் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலளித்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கிறஹாம் ஸ்மித், கிரேஷல் கிப்ஸ ஆகியோர் அணிக்கு சிறந்த அத்திபாரத்தை இட்டுக் கொடுத்தனர். எனினும் இவ்விருவரினது விக்கெற்றுக்களை ரைரிஸ் வீழ்த்தியதன் மூலம் தென்னாபிரிக்க அணி அடுத்தடுத்து விக்கெற்றுக்களை இழந்து தோல்வியைத் தழுவியது. இறுதிக் கட்டத்தில் ஷோன் பொலக் அடுத்தடுத்து 3 சிக்ஸர்கள் அடித்த போதிலும் மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட ஆறு ஓட்டங்களை அவரால் பெற முடியாமல் போனது. இறுதியில் தென்னாபிரிக்கா 7 விக்கெற்றுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கிரேஷல் கிப்ஸ் 69 ஓட்டங்களையும், அஸில் பிறிம்ஸ் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும் ஸ்மித் 43 ஓட்டங்களையும் பெற்றனர். ரைரிஸ் 44 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

(யே-121)

# இறைவனின் தரிசனத்தை உணர்வதற்கு போலி வேடங்கள் களையப்படவேண்டும்

'நீங்கள் வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள். அவை புறம்பே அழகாகத் தோற்றமளிக்கின்றன. அவற்றின் உள்ளேயோ இறந்தவர்களின் எலும்புகளும் எல்லாவகையான அழுக்குகளும் நிறைந்திருக்கின்றன' (மத் 23:27)

மனிதர்கள் வெளியரங்கமாக தம்மை நல்லவர்களாகக் காட்டிக்கொள்ளப் போலி வேடங்களையும் - முகமூடிகளையும் அணிந்து கொள்ளுகின்றார்கள். தமது வாழ்வியலை நல்லபடியாக அமைத்



துக்கொள்வதாக எண்ணிப் பிறரை வஞ்சிக்கின்றார்கள்.

ஒருநாள் பொழுதை எடுத்துக்கொண்டால், எத்தனையோ போலி வேடங்களை நாம் அணிந்து கொள்ளுகின்றோம். அத்தனையும் எமது குற்றத்தை மறைக்க எம்மை நல்லவர்களாக வெளிக்காட்ட எடுக்கும் முயற்சிகள் ஆகும்.

மனிதர்கள் வெளிப்பார்வைக்கு நல்லவர்களாக இருக்கின்றவர்கள் குற்றவாளிகளாக வெளிப்படுகின்ற போது,

'இவர் இப்படிச் செய்வார் என்று நான் நினைத்துக் கூடப் பார்க்கேல்ல'

'அந்த மனுசன் கதைக்கேக்க எந்தளவு தாழ்மை ஆனால், அவருக்கு வாழ்க்கையைச் செம்மையாக்க முடியாமல் போயிட்டுதே'

'எந்தளவு வசதியாக பேர் புகழுடன் வாழ்ந்த அந்த மனுசனின் சின்னத்தனச் செயலால் எல்லாம் போச்சு'

என்று ஆச்சரியத்தை உண்டாக்கும் வகையில் சில மனிதர் தமது வாழ்வியலை அமைத்துக் கொள்ளு கின்றார்கள். அதனால் சமூகத்தில் இகழ்ச்சிக்குரிய ஒருவராகக் கணிக்கபபடுகினறார்கள்.

### நெறி பிறழ்ந்துள்ள தலைமைத்துவம்

இன்று வழிகாட்டிகளாக திகழ்பவர்கள் நெறிகெட்டுப் போகின்றார்கள். முன்மாதிரிகை தலைகீழாகமாறி, எல்லாம் போலியான முறையில் வாழ்வியலை நகர்த்தி, சமூகத்தைச் சீர்கெடுக்கும் தலைமைகளாக இருப்பதைக் காணலாம்.

சொல்லும் செயலும் ஒன்றாகும்போதே வாழ்வியலை நன்னெறியாக அமைத்துக்கொள்ள முடியும். மாய உலகத்தில் மற்றவருக்கு வழிகாட்ட எமது வாழ்வே நற்செய்திப் பொருளாக வேண்டும். உண்மையும் நேர்மையும் வாழ்வியலில் குடிகொண்டு செயல் வடிவமாகும்போது இறை தரிசனத்தை மற்றவர்கள் எம்மில் கண்டு கொள்வார்கள்.

## பரமபிதா காட்டிய பாதை

அரசியலிலும் பொய்-போலி நிலை இருக்கின்றது. ஏமாற்று, சுரண்டல், அடக்குமுறை, கொலை, புறக்கணிப்பு இத்தனையும் மக்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றன. அரசியல் தலைவர்கள் மேடைபபேச்சின்போது தம்மைவிட சுத்தர் வேறு யாரும் இல்லை என்று வெளிக்காட்டி பல அம்சக் கோரிக்கைகளைக் கொடுத்து ஏமாற்றுகின்றார்கள். மக்களுக்குச் சேர வேண்டிய சொத்துக்களை அபகரித்துக் கொள்ளுகின்றனர்.

### போலியான வாழ்வு

இதைப்போல தான் எமது சமூக-சமய-குடும்ப வாழ்வில் நாம் மற்றவர்களை ஏமாற்றுகின்றோம். வெளிவேடமாக நல்லவர்களாக மற்றவர்கள் எம்மை மதிக்க வேண்டும் என்பதற்காகச் செயற்படுகின்றோம். ஆனால், மறைவாக எத்தனையோ பாவமான காரியத்தை உறவினர்களைப் பழிவாங்கும் வகையில் செயற்படுகின்றோம். இதை யாரும் கண்டுகொள்ளப் போவதில்லை என்றும் கருதுகின்றோம். ஆனால், அவை ஒருநாள் வெளிப்படும். மக்கள் முன் போலி வேடம் கலையும். எமது சமூகத்தில் மறைமுகமாக அநீதிகளையும் - சின்னத்தனங்களையும் புரிபவர்கள் வரலாற்றில் வெளிப்படாமல் போனது இல்லை.

இறைதரிசனத்தை உண்மையாக சுவைக்க வெளிப்படையாகவும், உள்ளார்ந்த ரீதியாகவும் நாம் நேர்மையாகவும், உண்மைத்துவமாகவும் நடந்துகொள்வோம். போலி வேடத்தைக் களைந்து கொள்வோம்.

யாழ். ராதவல்லி

ஆகவே, இயேசு எம்மைப் பார்த்து எச்சரிக்கின்றார். 'நீங்களும் வெளியே மக்களுக்கு நேர்மையாளராய்த் தோற்றமளிக்கிறீர்கள். ஆனால், உள்ளேயோ போலித்தனமும் நெறிகேடும் நிறைந்தவர்களாய் இருக்கிறீர்கள்' (மத் 23:28) என்று. □

## தவக்கால ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் முன்னெடுக்கப்படும் தவக்கால ஆற்றுகையில் இம்முறை 'காவியநாயகன்' எனும் பெயரில் திருப்பாடுகளின் காட்சியின் பிரதி வழங்கும் வைபவம் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு மன்ற அரங்கில் பிரதி இயக்குநர் யோ.ஜோன்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-51)

## உலக சாரணர் தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சாரணர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் 'உலக சாரணர் தினம்' இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் சங்கத்தின் யாழ். மாவட்ட ஆணையாளர் சு.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராஜதுரை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (தி-18)

## பாராட்டு விழாவும் ஆண்டுநிறைவு விழாவும்

(அளவெட்டி)

ஊரெழு வளர்பிறை சனசமூக நிலையமும் வளர்பிறை சேமிப்புச் சங்கமும் இணைந்து நடாத்தும் 'பாராட்டுவிழாவும் ஆண்டு நிறைவு விழாவும்' இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு வளர்பிறை கலையரங்கு முன்றலில் சங்கத் தலைவர் இ.மன்மதராசன் தலைமையில் நடைபெறவுள்ளன. (தி-83)

# நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை இனிமேல் ஐ.தே.கட்சி வழங்காது

## பிரதித் தலைவர் கரு ஜயசூரிய அறிக்கை

(கொழும்பு)

நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொண்ட தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடுவதை ஐக்கிய தேசியக் கட்சி ஒரேயடியாக நிறுத்திக்கொள்வதாக அதன் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய அறிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக கரு ஜயசூரிய நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், வாக்குகள் சேகரிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட பொய் வாக்குறுதிகளை வழங்கும் வகையில் தேர்தல் விஞ்ஞாபனங்கள், அறிக்கைகள் மற்றும் பொதுமக்களுக்கான பிரகடனங்கள் ஆகியவற்றை வெளியிடுவதை வழககமாக்கிக் கொண்டுள்ள பழமையான எண்ணங்களை ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக நிராகரிக்கிறது.

கடந்த 2001ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் பொய் வாக்குறுதிகளை வழங்குவதை நிறுத்தியிருந்தோம். அதேபோல் இவ்வாணடும் வெளியிடப்படவுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் பொய் வாக்குறுதிகளை வழங்குவதை நிறுத்திக்கொள்ளவுள்ளோம்.

பல அரசியல் கட்சிகள் கடந்த காலங்களில் இவ்வாறான பொய் வாக்குறுதிகளைப் பெருமளவில் வழங்கியுள்ளன. விவசாயிகளுக்கு மானியம், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு, விசேட சமுர்த்திக் கொடுப்பனவுகள் போன்றன உள்ளிட்ட மற்றும் பல உறுதிமொழிகளைப் பொய்யாக வழங்கி அவற்றை இறுதிவரை நிறைவேற்றாமல் பல கட்சிகள் இருந்து வந்துள்ளன.

இவற்றையெல்லாம் முழுமையாக அறிந்திருந்த நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எப்போதும் பொய் வாக்குறுதிகளை வழங்கப்போவதில்லையென கடந்த 2001ஆம் ஆண்டே தீர்மானிததிருந்தோம். எமது வேட்பாளர்களுக்கு இது எத்தனையோ அசௌகரியமாக இருந்த போதிலும், நாம் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அண்மையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசுகையில், 'தான் இனிமேல் மக்களிடம் பொய் வாக்குறுதிகளை வழங்கப்போவதில்லை' எனக் குறிப்பிட்டிருந்தார். எந்தவொரு அரசியல்வாதியும் இது போன்ற வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கவே விரும்புவார்கள். நாமும் அவ்வாறு நேர்மையுடன் செயற்படவே விரும்புகிறோம்.

எபபோதும் மக்களுடன் நெருங்கிய அரசாங்கமாக இருக்கவே நாம் விரும்புகிறோம். அவ்வாறான நல்ல வாய்ப்புக்களை மக்களுக்கு வழங்க ஆரம்பித்த வேளையிலேயே ஜனாதிபதியால் பாராளுமன்றம் திடீரெனக் கலைக்கப்பட்டது.

எனினும், எமது வேட்பாளர்கள் பொய் வாக்குறுதிகளை வழங்குவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கமாட்டேன். இவ்வருட எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 2வருடகால செயற்பாடுகளின் பெறுபேறுகள் இடம்பெறவுள்ளதுடன், கடந்த 2001ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்துடன் ஒன்றிப்போகும் வகையில் இதுவரை முடிக்கப்படாத புதிய வேலைத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டிருக்குமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-18)

# சமூக நலன்புரி அமைச்சினால் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் சமூக நலன்புரி அமைச்சினால் சகல பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஆகியோரிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

இவ்வாண்டுக்கான வேலைத் திட்டங்கள் அனைத்தும் நாடு தழுவிய ரீதியில் ஒரே விதத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்காக, புதிய தகவல் திரட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இவ்வாண்டின் வேலைத்திட்டங்களின் உறுதிப்பாட்டை மேலும் வலுவூட்டுவதற்கு ஜப்பான் நாட்டின் 'ஜய்சா' எனும் நிறுவனம் முன்வந்துள்ளது. அத்துடன், முன்பள்ளி ஆரம்பித்தல், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி உட்படக் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தல், சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்தல் போன்றனவற்றிற்கும் அனுசரணை வழங்குவதற்கு இந்நிறுவனம் உடன்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பான விபரங்களை உள்ளடக்கியதான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தியாக்கி, விரைவில் சமூக நலன்புரி அமைச்சுக்கு அனுப்பிவைப்பதுடன், இதன் பிரதி ஒன்றைத் தனக்கு அனுப்பிவைக்குமாறும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபா திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் கேட்டுளளாா். (ந-3)

# ஊழல்கள் இடம்பெற்றால் வாக்குகள் செல்லுபடியற்றவை

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின்போது வன்முறைகள் மற்றும் அசம்பாவிதங்கள் இடம்பெறும் வாக்குச்சாவடிகளின் வாக்குகள் அனைத்தும் இரத்துச்செய்யப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிகளில் கடமையில் இருக்கும் அதிகாரிகளை அச்சுறுத்தித் தவறான வழியில் நடத்துவது, அதிகாரிகளின் அதிகார பூர்வ செயற்பாடுகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவது, வாக்குப் பெட்டிகளை மோசடிசெய்ய முற்படுவது போனற சம்பவங்கள் இடம் பெற்றால், அச்சாவடிகளின் வாக்குகளை இரத்துச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறான இடங்களில் மீண்டும் நீதியான முறையில வாக்கெடுப்புகள் நடைபெறும எனவும அவர் மேலும் தெரிவித்ததுடன், நீதியான தேர்தலை நடாத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என்றார். (தி-60-4)

# ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் எனக்கு கிடையாது

## தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரச ஊடகத்தினருக்கு ஆலோசனைகள் மட்டுமே வழங்க முடியும். ஆனால், தேர்தல் பிரசாரங்களில் சமநிலை பேணப்படுவதை உறுதி செய்வதற்கு எனக்கு அங்கீகாரம் கிடையாது.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

17ஆவது திருத்தச் சட்டத்தின் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளின் கீழ் சட்டங்களை இயற்றவேண்டும் என பாராளுமன்றிற்கு நான் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்திருந்தேன். இச்சட்டத்தின்படியே தேர்தல் பிரசாரங்களின்போது அரச ஊடகங்கள் பாரபட்சம் காட்டாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியை நியமிக்க முடியும். ஆனால், பாராளுமன்றம் இச்சட்டங்களை இன்னமும் நிறைவேற்றவில்லை.

மேலும், கடந்த தேர்தல்களில் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடை செய்யுமாறு வலியுறுத்தினேன். ஏனெனில், இதனால் மனித வலுவும் பணமும் வீணாகின்றன. ஆனால், அவற்றை அகற்றியவுடன் அவை உடனேயே மீண்டும் ஒட்டப்பட்டன என்றார்.

1995இல் இருந்து தேர்தல் ஆணையாளராகச் செயற்பட்டு வரும் இவர், இதுவரை மூன்று பொதுத் தேர்தல்களையும், ஒரு ஜனாதிபதித் தேர்தலையும் மாகாணசபை, உளளூராட்சித் தேர்தல்களையும் நடத்தியுள்ளார்.

தற்போது இருதய நோயால் அவதிப்படும் இவர், தனக்கு ஓய்வூதியம் வழங்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம்வரை சென்றிருந்தார். ஆனால், சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவை நியமிக்க ஜனாதிபதி தவறியமை காரணமாக அவருக்கு ஓய்வூதியம் வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டுளளன. இந்நிலையில், அடுத்த தேர்தலையும் நடாத்துவதற்கு இவர் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். (ந-6)

# சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதியுடன் இணைய வேண்டும்

## முன்னாள் அமைச்சர் அதாவுல்லா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக அனைவரும் ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என முன்னாள் அமைச்சர் ஜனாப் அதாவுல்லா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகி முஸ்லிம் தேசிய முன்னணியில் இணைந்து கொண்டதன் பின்னர், நேற்று முன் தினம் கொழும்பில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே ஜனாப் அதாவுல்லா இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அம்மாநாட்டில் அவர் தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில், சமாதானத்தை நோக்காகக் கொண்டு அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளில் பல தாக்கங்களை உருவாக்கியுள்ளது.

அரசாங்கத்தின் இச செயற்பாடுகள் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸின் தலைமைப் பீடத்திற்குப் பல தடவைகள் அறிவித்திருந்தேன். ஆயினும், அதன் தலைமைப்பீடம் அரசியல் சுய இலாபம் கருதி இது விடயம் தொடாபாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்காமல் அலட்சியப் படுத்தி விட்டது.

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சக்தியும் வல்லமையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் மாத்திரமே உண்டு. எனவே, நிரந்தர சமாதானத்தை விரும்பும் எந்தவொரு அரசியல் கட்சியும் ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு ஏற்றவகையில் அவரது அணியில் இணைந்து கொள்வதே பொருத்தமானதாகும் எனக குறிப்பிட்டுள்ளார். (யே-60,4)

# 2 வருட நிறைவை முன்னிட்டு மனிதநேய அமைப்புக்கள் மனு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, இன்றுடன இருவருடம் பூர்த்தியடைகிறது.

இக்காலப்பகுதியில் இடம் பெற்றசெயற்பாடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பான மனுவொன்று இன்று மு.ப.10.00 மணிக்கு மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தால், இலங்கைபோர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் கையளிக்கப்படவுள்ளது.

இம்மனுவானது, யாழ். அலுவலகத்தினூடாக இலங்கையின் நோர்வேத் தூதுவராலயத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிபபிடத்தக்கது. (யே-18)





ஜாதிக ஹெல உறுமயக்-கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக அதன் பிரதான யாழ். மாவட்ட வேட்பாளர் விதாரநதினியே மெதானந்ததேரர் அவரின் உதவியாளர் ஹெட்டியாராய்ச்சி சகிதம் யாழ். செயலகத்திற்கு வேட்பு மனுத் தாக்கல் செய்ய வந்தபோது எடுக்கபட்ட படங்கள்.

# யுத்தகாலத்தில் படையினர் மனித உரிமையை மீறியுள்ளனர்

## அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(களுத்துறை)

இராணுவத்தினர் மனித உரிமைகளிற்கு மதிப்பளிக்க வேண்டும் என மக்கள் தொடர்பாடல் அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் இலங்கை இராணுவத்தினருக்கு மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தொவித்துள்ளார்.

அங்கு கதிர்காமர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆயுதப் படையினரால் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பது இயலாத காரியம் இதனால் கடந்த காலங்களில் இராணுவத்தினர் பல மனித உரிமை மீறல் சம்பவங்களில் சம்பந்தப் பட்டுள்ளனர். இதன் விளைவாக நாடு பல சிக்கல்களைச் சர்வதேச ரீதியில் எதிர்நோக்கியது என்று தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட சட்ட நடவடிக்கைளிற்கான கட்டளைத்தளபதி லெப் ஜெனரல் லயனல் பலகல்ல உரையாற்றுகையில்,

இலங்கையின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், நாட்டின் இறைமையைப் பேணுவதற்காகவும் தொடர்ந்தும் இராணுவம் பலப்படுத்தப்படும் எனவும், வெளிநாட்டில் பயிற்சிகளுக்காக இராணுவத்தினர் தொடர்ந்தும் அனுப்பப்படுவதுடன் சர்வதேச ரீதியிலான இராணுவ ஒத்துழைப்புகளும் பேணப்படும் என்றும் கூறினார்.

(ந-4,60)

# யாழ். பொதுநூலகம் விரைவில் திறக்கப்படும்

## மாநகர ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தை மிக விரைவில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பத்திரிகைக் குறிப்பொன்றை விடுத துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

எரியூட்டி அழிக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகத்தைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்ட கட்டிடங்கள் திணைக்களம் முதற்கட்ட வேலைகள் யாவற்றையும் பூர்த்தி செய்து குறிப்பிட்ட கட்டிடத்தினைக் கடந்த 07.05.2003 எம்மிடம் கையளித்தது.

இரண்டாம் கட்டமாக சிற்றுண்டிசசாலை, பழுதூக்கி, மேல்மாடியில் வாசிப்பறை ஆகியவற்றை அமைக்கும் வேலையில் கட்டிடங்கள் திணைக்களம் முழு வீச்சில் செயற்பட்டுவருவதனால் சகல வேலைகளும் முடிவடையும் நிலையில் உள்ளன.

மீளமைக்கப்பட்ட பொதுசன நூலகம் 07.05.2003 இல் எம்மால் பொறுப்பேற்கப்பட்ட போதும், ஆளணி அங்கீகாரம் கிடைக்கப் பெறாமை, மாதாந்தம் தேவைப்படும் பராமரிப்புச் செலவுக்கான ரூபா 5 இலட்சம் நிதிப்பற்றாக்குறை போன்ற காரணங்களினால் நூலகத்தை வாசகர்களின் பாவனைக்கு உடனடியாகத திறந்து விடமுடியாத நிலை காணப்பட்டது.

மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குரிய பல்வேறு பட்ட முயற்சிகள் எம்மால மேற்கொள்ளப்பட்ட போதும் இதுவரை எதுவும் வெற்றியளிகக வில்லை.

இதனிடையே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் இதுவரை காலமும் இயங்கி வந்த இடைக்கால நூலகம், குறிப்பிட்ட கட்டிடம் உரியவர்களிடம் மீள-ஒப்படைக்கப்பட வேண்டியேற்பட்டமையால் 20.09.2003 முதல் மூடபபட்டு கட்டிடம் உரியவர்களிடம் ஒப்படைக்கபபட்டுள்ளது.

இந்நிலையில் வாசகர்களிற்கு ஏற்பட்ட இடையூறுகளை நீக்குமுகமாகவும், தமிழீழ விடுதலைப் புலிகள், பொதுத்தாபனங்கள், கல்விமான்கள், பொதுமக்கள் ஆகியோரது தொடர்ச்சியான வேண்டுகோள்கள் காரணமகவும் நூலகத்தினை பயன்படுத்துவதைத் தாமதிக்காது உடனடியாக அனுமதிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

புனரமைக்கப்பட்ட நூலகம் மீளவும் இயங்குவதற்குரிய ஆளணி அங்கீகாரம் இதுவரை கிடைக்கப்பெறாமையினால் 5 கிளை நூலகங்களின் சேவை நேரத்தை மட்டுப்படுத்தி மீளமைக்கப்பட்ட நூலகத்தில் மட்டுப் படுத்தப்பட்ட நேரத்தில் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கபடுகின்றது என்பதைத தெரிவிப்பதுடன் தொடர்நதும் சமூக அமைப்புக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம் எனத் தொவிக்கப்பட்டுள்ளது. (ந)

# தேர்தல் செலவினங்கள் இம்முறை 65 கோடி

(கொழும்பு)

கடந்த ஆண்டு தேர்தல் செலவினங்களை விட இம்முறை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் செலவினங்கள் அதிகரிக்கும் என தேர்தல் திணைக்களததால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான செலவினம் 65 கோடி ரூபாவாக இருக்குமென மதிப்பிடப பட்டுள்ளது.

பொதுத்தேர்தலுக்கான செலவுகள் கடந்த 2000ஆம் ஆண்டில் 64 கோடி 82 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாவாகவும், 2001 ஆம் ஆண்டில் 59 கோடி 64 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவாகவும் இருந்தது.

இந்நிலையில், எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான செலவினங்கள் அதிகரித்துள்ளமைக்கு, திடீரெனப் பாராளுமன்றம் கலைக்கப் பட்டதும் ஓர் காரணம் என அவ் ஆய்வுகள் மேலும் தெரிவிக்கின்றன.

(யே-18)





யாழ். சிறைச்சாலையில் கடந்த 5 நாட்களாக தம்மை விடுவிக்கக்கோரி உண்ணாவிரதம் இருந்த 67 மீனவர்களை பார்வையிடுவதற்காக இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அதிகாரிகள் யாழ். சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# செய்தித் துளிகள்

## குடிநீர் வழங்க நிதி ஒதுக்கீடு

(மருதங்கேணி)

பளைப்பிரதேசத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரச அதிபரின் முயற்சியால் பளைப் பிரதேசத்தில் இருந்து பளைப் பேருந்து நிலையம்வரை நிலத்தின் கீழான குழாய்மூலம் குடிநீர்வழங்க 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (தி-35)

## சமுர்த்திவங்கி திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

பிரான்பற்று தம்பித்துரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள 'சமுர்த்தி வங்கிச சங்கத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி கட்டடத்தினை யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல், சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் மற்றும் சண்டிலிப்பாய் உதவிப்பிரதேச செயலர் ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர்.(ந-246,3)

## வானியற் பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்விவலயத்தின் அனுசரணையுடன் கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியின் கணித விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்படும் வானியற்பாசறை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது. (ந-18)

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்விப் பயிற்சி நிலையத்தினால் 'சமூகத்தில் மனித மேம்பாடு' எனும் தலைப்பிலான கருத்துரை இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்துரையினை பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் வழங்கவுள்ளார். (ச)

## மருத்துவ முகாம்

(கோப்பாய்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் கண்பார்வைக் குறைபாடு மற்றும் செவிப்புலன் குறைபாடுடைய மாணவர்களுக்கு விசேட மருத்துவமுகாம் ஒன்றை நடாத்துவதற்கான ஒழுங்குகளை மாகாணக் கல்விப்பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

அதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 5ஆம் திகதிவரை யாழ். மாவட்டத்தில் இம்முகாம் நடைபெறவுள்ளது.

எனவே, இம்முகாமில் பயன் பெறவிரும்பும் மாணவர்ளின் பெயர்ப் பட்டியலை வலயப் பணிமனையில் சேர்ப்பிக்குமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (ந-79)

## கனடாச் சங்கம் நிதியுதவி

(கோப்பாய்)

கோப்பாய் இந்துமயானப் புனரமைப்பு, கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கான நிரந்தரக் காணிக கொள்வனவு ஆகியவற்றுக்கான நிதியுதவிகளை கோப்பாய் கனடாச் சங்கம் வழங்க முன்வந்துள்ளது.

தற்போது கோப்பாயில் தங்கியுள்ள இச்சங்கத்தின் பிரதிநிதிகளே இதற்கான இணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நீண்ட காலமாகத் தனியார் வீடொன்றில் தற்போது இயஙகிவரும் 'ஏ' தரத்திலான கோப்பாய் தபாற்கந்தோருக்கான நிரந்தரக்காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்கும் இச்சங்கத்தின் உதவி பெறப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது. (ந-79)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைக் கழகத்திற்கு கல்வியாண்டு 2003/2004இல் இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கை நெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் நாளை 23ஆம் திகதி ஆரம்பமாகும். அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு இசைத்துறை விரிவுரை மண்டபத்தில் புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வும் நடைபெறும். (தி)

## வீடியோப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் புகழ்பெற்ற போலந்து நெறியாளரான கிறிஸ்ரோ.ஃ.வ் கியலெஸ்கியின் **'Three Colours blue'** என்னும் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இப்படக்காட்சியின் இறுதியில், அ.யேசுராசா, க.சட்டநாதன், ஏ.ஜே. கனகரட்னா ஆகியோரின் நெறிப்படுத்தலின்கீழ் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் எவரும் இதில் பங்கு கொண்டு பயன்பெறலாம் என ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (தி-18)

## பயிற்சி வகுப்பு

(சுதுமலை)

யாழ். மாவட்ட மக்கள் நலன் புரிச் சங்கத்தின் அனுசரணையுடன வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்குக் கணிப் பயிற்சி வகுப்புகளும், தையல்பயிற்சி வகுபபுகளும் கடந்தவாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 60ற்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பயிற்சி வகுப்புக்களுக்காக அனுமதிக்கப்பட்டனர்.

தொடர்ந்து 6மாதங்கள் இரு பிரிவுகளாக மேற்படி பயிற்சி வகுப்புகள நடாத்தப்படவுள்ளன.(தி-252)

## மோ.சைக்கிள்கள் வவு. திருட்டு

(வவுனியா)

வவுனியா பஸ் நிலையத்தில் நிறுததிவைக்கப்பட்டிருந்த 2 மோடடார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சைக்கிள் உரிமையாளர்கள் உணவு விடுதிக்குச் சென்றுவிட்டு வெளியே வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளது தெரியவந்தது. (ந-61,8)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் 24ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப.10.00 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-75)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, உள்ளூர்த் திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புப் பிரதிநிதிகளை இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (யே-18)

## சண்டிலிப்பாயில் மூலிகைத் தோட்டம்

(திருநெல்வேலி)

சண்டிலிப்பாய்ப் பகுதியில் மூலிகைத் தோட்டம் ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சண்டிலிப்பாய்ப் பகுதியில் மூலிகைத் தோட்டம் ஒன்றை அமைப்பதற்கான அனுமதி ஏற்கனவே யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் தலைமையிலான குழுவினர் இதற்கான காணியொன்றைக் கொள்வனவு செய்யும் முயற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். (தி-43)

## பரிசளிப்பு விழா

(சுண்டுக்குளி)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் அதன் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப. 6.00 மணி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத்தின் தலைவர் கே.மயில்வாகனம் தலைமையில் பரிசளிப்பு விழாவை நடத்தவுள்ளது.

இவ்விழாவில், கல்விப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கும் வைபவமும், அமரர் சமூகயோகி எஸ்.வி. தம்பையா ஞாபகார்த்த புலமைப் பரிசில் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளன. அத்துடன், 1998ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டுவரை நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கும், அதேகாலப்பகுதியில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற சமாச மாணவ மாணவிகளுக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா, யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி ஏ.பிறேமசங்கர், யாழ். மாவடட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.செம்மணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-110)

## சுகாதார நிலையம் அமைக்க கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைக் கிராமப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மெலிஞ்சிமுனைப் பகுதியல் பொது மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அம்மண்டபத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தினை இயக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் இப்பகுதியில் உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் சிகிச்சை வசதிகளைப் பெறமுடியும். (தி-75)

## சந்திகளில் குழிகள்

(கோப்பாய்)

யாழ். பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி ஆகிய பிரதான சந்திகள் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

போக்குவரத்து நெரிசல்மிக்க இவ்வீதியில் பாதசாரிகள் சைக்கிளோட்டிகள், மோட்டார் சைக்கிள்பாவனையாளர்கள் ஆகியோர் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், இச்சந்திகளில் வீதி விளக்குகள் ஒழுங்காகப் பொருத்தப்படாமையால் இரவு வேளையில் விபத்துககளும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி-79)



அருள்கல்வி நிலையத்தின் அதிபர்

இரா.அருட்செல்வம்

அவர்களின்

வெள்ளிவிழா

இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபம் (இராசரத்தினம் அரங்கு)

காலம்: 22. 02. 2004 (ஞாயிற்றுக்கிழமை)

தலைவர்: திரு. க. தேவராஜா (அருள்வெள்ளிவிழாச் சபை)

நிகழ்ச்சி நிரல்

2.30 - மங்கள விளக்கேற்றல்
2.35 - தேவாரம் - செல்வி பவானி சபாநாயகம்
2.40 - வரவேற்புரை - திரு.ம.நாகரூபன் (உப தலைவர் அருள்வெள்ளிவிழாச் சபை)
2.45 - ஆசியுரை - பிரம்மஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள் (பிரதமகுரு ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோவில்)
2.50 - சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் (இணுவில் கந்தசுவாமி கோவில்)
2.55 - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)
3.00 - அருட்கவி செ.விநாசித்தம்பி புலவர்

வாழ்த்துப்பா

3.05 - பண்டிதர் சா.வே.பஞ்சாட்சரம் (முன்னாள் ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி)
செல்வி சுகந்தி விநாயகமூர்த்தி (ஆசிரியர், யா/ வயாவிளான் ம.ம.வித்.)

வாழ்த்துரைகள்

3.10 - S.R.ஜெயப்பிரகாசம் (உதவிப் பிரதேச செயலர், உடுவில்)
திரு.அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)
பேராசிரியர் சபா.ஜெயராசா (நுண்கலைப்பீடம், யாழ். பல்கலைக் கழகம்)
திரு.எஸ்.குபேரநாதன் (கோட்டக்கல்வி அதிகாரி)
திரு.சிவபாதசேகரம் (அதிபர்)
திரு.க.கனகராஜா (அதிபர், யா/வயாவிளான் ம.ம.வித்.)
திருமதி வை.கணேசபிள்ளை (முன்னாள் ஆசிரியர்)
திரு.துரை.எங்கரசு (அதிபர், யா/ இணுவில் மத்திய கல்லூரி)
திரு.இரா.செல்வவடிவேல் (ஆசிரியர்)
திரு.சண்.வாமதேவன் (அதிபர், கோண்டாவில் இராமகிருஷ்ணா)
திரு.த.வரதன் (எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்)
திரு.என்.பாலகிருஷ்ணன் (ஆசிரியர்)

3.20 - மலர் வெளியீடு
திரு.க.தேவராஜா
3.25 - மலர் பெறுதல்
(விழா நாயகன்)
3.40 - மலர் வெளியீட்டுரை
திரு.ந.விஜயசுந்தரம் (ஆசிரியர்)
3.50 - மலர் ஆசிரியர் உரை
திரு.ஞானதிருக்கேதீஸ்வரன் (அமைப்பாளர், அருள்வெள்ளிவிழாச் சபை)
4.50 - விழா நாயகனைக் கௌரவித்தல்

நூலகங்களைக் கணனி மயப்படுத்தும் நோக்கில் (Mouse) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கணனி முகாமைத்துவ மென்பொருளை இணுவில் பொதுநூலகத்திடம் கையளித்தல்.

5.05 - ஏற்புரை
5.15 - நன்றியுரை
திரு.இரா.கணேஸ் (அருள்வெள்ளிவிழாச் சபை)

"அருள்வெள்ளிவிழாக் காண அனைவரும் வாரீர்"

குறிப்பு:- 2.00 மணிக்கு A.T.C. கல்வி நிலையத்தில் இருந்து விழாநாயகனை ஊர்வலமாக அழைத்துவரும் நிகழ்ச்சி இடம்பெறும்

நன்றி

அருள் வெள்ளிவிழாச் சபை,
22. 02. 2004.

(8274)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

53

## இரண்டாம் பகுதி

### புத்தளம் - கற்பிட்டி வழமைகள்

### 1.புத்தளம், கற்பிட்டி ஆகியவற்றிலுள்ள தேசவழமையும் சாதி வழமைகளும்

**1. தேசவழமை**

யாழ்ப்பாணத் தேசவழமைக்கும் புத்தளம் கற்பிட்டி ஆகிய பகுதிகளிலுள்ள தேசவழமைக்கும் இடையிலே ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் காணப்படுகின்றன. தேசவழமைச்சட்டத்தின் படி சொத்துரிமைபற்றிய விதிகள் யாழ்ப்பாணத் தமிழரிடையிலுள்ள எல்லாச் சாதியாருக்கும் பொதுவானவை. புத்தளம், கற்பிட்டி ஆகிய பகுதிகளில் வாழ்ந்த சாதியினர் சிலருக்குத் தனியான வழமைகள் இருந்தன. முக்குவர், பரவர், சோனகர் ஆகியோரின் வழமைகள் வெவ்வேறானவை. ஆதன உரிமைகள் தவிர்ந்த விடயங்களைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத் தமிழரின் தேசவழமையும் புத்தளத்துத் தமிழரின் தேசவழமையும் பொதுவான அம்சங்களைக் கொண்டுள்ளன. அவற்றைப் பற்றிய கோட்பாடுகள் அடிப்டையிற் பொதுவானவையாகும் வேற்றுமைகள் எல்லாம் விபரங்களைப் பற்றியனவாகும்.

யாழ்ப்பாணத் தேசவழமையிற் போல சொத்துகளை முதுசொம், சீதனம், தேட்டம் என மூன்று வகையினவாகக் கொள்ளும் வழக்கம் புத்தளம், கற்பிட்டி ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தமிழரிடையிலுங் காணப்பட்டது.

**2.செட்டிகளின் வழமை**

சகோதரன் ஒருவனதும் அவனுடைய சகோதரியினதும் பிள்ளைகளைக் கலியாணம் முடித்து வைப்பது செட்டிகள், வெள்ளாளர், செம்படவர், வண்ணார், மாலுமிகள் முதலியோரிடையிற் காணப்பட்ட வழக்கமாகும். செட்டிகளின் வழமைப்படி பெற்றோர் முதலான முதியோர்களின் விருப்பத்துக்கு இணங்க மைத்துனன் ஒருவனைக் கலியாணம் பண்ணமாட்டேன் என்று பெண்பிடிவாதமாய் இருப்பாளேயானால் அவள் சீதனம் பெறுவதில்லை. அதேபோலத் தனது மைத்துனியைக் கலியாணம் பண்ணுவதற்கு விரும்பாத ஆணொருவன் முதுசொம்மீதான உரிமைகளை இழந்து விடுவான் பொற்றோர்களதும் இன பந்துக்களினதும் விருப்பத்திற்கு ஏற்பவே கலியாணங்கள் நடைபெற்றன.

கலியாணத்தின் காரணமாகச் சீதனம்,முதுசொம் ஆகிய இரண்டும் கலப்பதில்லை. "மனைவியானவள் பிள்ளைகளில்லாது மரணமானாள் அவளுடைய சீதனத்தின் மீது கணவன் உரிமை பெறுவதில்லை'' அதேபோல ''மனைவி இருக்கப் புருஷன் பிள்ளகைள் இல்லாது இறந்தானேயாகில் அவனுடைய சொத்துக்கள் எல்லாம் அவனுடைய ஆண்சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் உரிமையாகும்''

தாலித்தியம் என்னும் வழமை ஒன்று புத்தளத்துச் செட்டிகள் மத்தியிலே காணப்பட்டது. கணவன் இறந்து போனால், அவனிடம்பொருள் பண்டம் ஏதேனும் இல்லாதவிடத்தும்,அவனுடைய விதவையை ஆதரிப்பதற்கு அவனுடைய சகோதரர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் பொறுப்புடையோர் ஆவர். அவளுடைய சீவியத்திற்காக ஒரு தொகைப் பணத்தைப் பற்றுச்சீட்டு எழுதிக்கொண்டு கொடுப்பார்கள். அது தாலித்தியம் எனப்படும். வேறு சாதியாரின் வழமைகள் பற்றிய ஆவணங்களிலே தாலித்தியம் என்னும் சொல் காணப்படவில்லை. புராதன வழமைப்படி தேசவழமையிலே , பிள்ளைகள் இருந்தால் அவர்களுட் பெண்பிள்ளைகளுக்கே தாயின் சீதனம் உரிமையாகும். பெண்பிள்ளைகள் இல்லாதுவிட்டால் மட்டுமே அது ஆண்பிள்ளைகளுக்கு உரியதாகும். ஆனால் புத்தளத்துச் செட்டிகளின் வழமைப்படி சீதனத்திலும் ஆண்பினள்ளைக்கே முன்னுரிமை என்பது மேல் வரும் குறிப்பினாலே தெளிவாகின்றது.

**சீதனம் மகனின் உரிமை**

''மகன் ஒருவனும் மகள் ஒருத்தியும் இருக்கத் தாயும் தகப்பனும் இறந்து போனால், எல்லாச் சொத்துக்களும் மகனுடைய உரிமையாகும். மகளுக்கு அவற்றில் உரிமை இல்லை''

பாகப்பிரிவினையிற் பெண் மக்களுக்குத் தாயின் சீதனத்திலும் தகப்பனுடைய முதுசொத்திலும் உரிமையில்லாத பொழுதும் சமூகவழமைப்படி அவர்களுக்கு சீவிய உரித்தும் சீதனம் பெறுவதற்கான உரிமையும் உண்டென்பதைப் மேல்வருவனவற்றால் அறிந்து கொள்ள முடிகின்றது.

"ஆயினும் அவளை ஆதரிப்பதற்கும், அவளுடைய சீவனத்திற்கு வேண்டிய வசதிகளைக கொடுப்பதற்கும், சீதனம் கொடுத்துக் கலியாணம் பண்ணி வைப்பதற்கும் அவன் கடமைப்பட்டிருப்பான் பெற்றோரின் சொத்துக்கள் இல்லாதவிடத்தும் ,தமக்கு வசதி இல்லாதவிடத்தும், ஆண் சகோதரர்கள் கடன் பட்டேனுந் தங்கள் சகோதரிகளுக்கான கடமைகளை நிறைவேற்றவேண்டும்''

**19ஆம் நூற்றாண்டில் வழமைகள் மாற்றம்**

ஒல்லாந்தரின் ஆட்சியிலும் மாற்றமடையாது நிலவிவந்த செட்டிகளின் புராதன வழமைகள் 19ஆம் நூற்றாண்டின் முதலிரு தசாப்தங்களிலுங் குறிப்பிடத்தக்க அளவிலே மாற்றம் அடைந்துவிட்டன. கற்பிட்டியின் செட்டி, வெள்ளாளர், கம்மாளார், வண்ணார் முதலியோரின் வழமைகள் பற்றிய அறிக்கையில் , உரிமையுஞ் சீதன வகையும் என்னும் பிரிவிற் கற்பிட்டி வைத்தியநாத உடையார் மேல் வருமாறு எழுதியுள்ளர்.

" ஒருதன் கலியாணம் பண்ணியிருந்து பிள்ளைகள் இல்லாமல் புருஷன் மரணிக்கச் சம்பவித்தால் அவன் தேடிய தேட்டத்திலும் முதுசொம்மிலும் பெண்சாதி கொண்டுவந்த சீதனத்திலும் புருஷனின் முறையாரும் பெண்சாதியும் சரிபங்காகப் பிரித்துக்கொள்கிறது. பிள்ளையும் இருந்தாற் சகலதிலும் பிள்ளையுந் தாயும் சரிபங்காகக் பிரித்துக்கொள்ளுகிறது. புருஷன் இருக்கப் பெண்சாதி மரணித்தால் பிள்ளையுந் தகப்பனும் இது முறை போலே பிரித்துக்கொள்ளுகிறது. பிள்ளை இருக்கத் தாய் மரணித்தால் அவளுடைய சொம் எல்லாம் பிள்ளைகளுடையது''

மேலே கூறப்பட்ட விதிகள் புராதன வழமைகளுக்கு மாறுப்பட்டனவாகும். அவை தேச வழமைக்கும் முரண்பட்டனவாகும். எனவே அவை தேசவழமைச்சட்டத்தினை நீதிமன்றங்கள் நடைமுறைப்படுத்தியமையால் ஏற்பட்டவை என்றும் கொள்ளமுடியாது. பிரித்தானியரின் ஆட்சியின் ஆரம்பத்திலே கடமைபுரிந்த ஐரோப்பிய நீதிபதிகள் பிரதேச ரீதியான வழமைகளைப்புரிந்து கொள்ளாமையாலும் உரோமன் டச்சுச்சட்டத்தை அனுசரித்துத் தீர்ப்புகளை வழங்கியமையாலும் அச்சட்டத்தின் செல்வாக்கினாலே புத்தளம்,கற்பிட்டி ஆகிய பகுதிகளின் தேசவழமையிலும் சாதிவழமைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன எனச் சிந்திக்கலாம். இவ்விடயம் ஆராய்ச்சியின் மூலமாகவே தெளிவு பெறும்.

(தொடரும்)

## முன்னாள் சபாநாயகர் மீது அனுரா குற்றம் சாட்டுகிறார்

(களனி)

முன்னாள் சபாநாயகர் ஜோசெப் மைக்கல் பெரேரா நடாளுமன்றத்தின சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்து வருவதாக ஜனாதிபதியின் ஆலோசகரான அனுரா பண்டாரநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

தற்பொழுது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. ஆனால் நாடாளுமன்றம் கலைக்கப்படும்வரை தானே சபாநாயகர் பதவியில் இருந்தமையால் தற்பொழுதும் தனக்கு நாடாளுமன்றச் சொத்துகளைப் பயன்படுத்தும் உரிமை உண்டு என ஜோசெப் மைக்கல் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை ஆட்சேபித்தே அனுரா பண்டாரநாயக்க இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார். அத்துடன், இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை மீறுவதாகவும் பதவியில் இருந்தபோது அவரிடம் கையளிக்கப்பட்ட சொத்துக்கள் மீள ஒப்படைக்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (யே-60,4)

## கச்சதீவுக்கு செல்லும் படகுகள் பதிவு செய்யப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி அவ் ஆலயத்திற்குச் செல்வதற்கான பயண ஒழுங்குகளையும் நெடுந்தீவு- குறிகட்டுவான் படகுச் சேவிக்கான பதிவுகளையும் மேற்கொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பேரானந்தம் கேட்டுள்ளார்.

மேற்படி ஆலய உற்சவத்தையொட்டி எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி சேவையில் ஈடுபடவுள்ள பயணிகள் படகுகளின் உரிமையாளர்கள், அன்றைய தினம் மு.ப 10. மணிக்கு தமது படகுகளுக்கான பதிவுகளை குறிகட்டுவான்துறை மற்றும் நெடுநதீவுத் துறையில் மேறகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதன்போது, தத்தமது படகுகள் தொடர்பான பததிரங்களைப் பிரதியுடன் இணைத்து பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப் பட்டுள்ளது. இதன் பினனர் கடற்படையினரால் படகுகள் பரிசோதனை செய்யப்பட்டு தகுதிச்சான்றிதழ் வழங்கப்படும்.

அததுடன், ஆலயத்திற்குச் செல்லும் யாத்திரிகர்கள் தமககுரிய குடிநீர், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்ல வேணடும்.ஆலயச் சுற்றாடலில் தற்காலிகக் கடைகள் அமைப்பதற் குரிய அனுமதியை முன்னரே பெறவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-18)

## ஜனவரி மாதத்தில் மட்டும் 430 பேருக்கு டெங்கு நோய்

(கொழும்பு)

கடந்த ஒரு மாதகாலத்திற்குள் 430 பேருக்கு டெங்குக் காய்ச்சல் பரவியிருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் கணக்கெடுப்புகள் மூலம் தெரிய வந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இக் கணக்கெடுப்பு இடம்பெற்றிருந்தாலும் இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்போரில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தில் வாழ்பவர்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பில் 125 பேர் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை இனம் கண்டு அவற்றை அழிப்பதற்குரிய நடவடிக்கைகள் பல்வேறுபட்ட அமைப்புக்களாலும் தீவிரமாக முன்னெடுக்கப் பட்டுவருகின்றது. (ந-60,4)

## யாழ்.முஸ்லிம் வட்டாரத்தில் காணி விற்பனையில் மோசடிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் வட்டாரங்களில் தற்போது குளறுபடியான முறையில் காணிகள் பரவலாக விற்பனை செய்யப்பட்டு வருவதால்,இது விடயம் தொடர்பாக விழிப்புடன் செயற்படுமாறு முஹம்மதியா ஜும் ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் காரியதரிசி ஆர்.கே. சுபர்கான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முஸ்லிம் வட்டாரங்களிலுள்ள காணிகள் தற்போது போலி உறுதிகளுடன் பரவலாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளில் காணி கொள்வனவு செய்வோர் இவ்வாறு பல முறை ஏமாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இவ்வாறு காணி விற்பனை மோசடியில் சில முஸ்லிம் தரகர்கள பொறுப்பற்ற முறையில் ஈடுபட்டு வருவதைக் கண்டித்து முஸ்லிம் வட்டாரங்களில் துண்டுப் பிரசுரங்கள் பல வெளியிடப் பட்டுள்ளன. அத்துடன், இவ்வாறான தரகர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் சில முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே மேற்படி பகுதிகளில் காணி விற்பனை மற்றும் கொள்வனவு செயற்பாடுகளை மிகவும் அவதானத்துடன் மேற்கொள்ளுமாறு அறிவிவுறுத்தப்பட்டுள்ளது. (யே-18)

## றோட்டறக்ட் கழகத்தின் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரமைய றோட்டறக்ட் கழகத்தினால் நடாத்தப்பட்ட மாணவர்களின் பொது அறிவு நுண்ணறிவுத் தேடலுக்கான 6வது பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்பரீட்சையில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு,

1ஆம் இடம்- திவாகர், மட்/சென் மைக்கேல்ஸ் கல்லூரி.
2ஆம் இடம்-சுபாஷினி, வட/ மெதடிஸ் மகளிர் கல்லூரி.
3ஆம் இடம்-கார்த்திகா, வட/இந்து மகளிர் கல்லூரி.
4ஆம் இடம்-அபிராமி, வட/இந்து மகளிர் கல்லூரி.
5ஆம் இடம்- பிரதீபன், நல்லூர் இந்து மகளிர் பாடசாலை.
6ஆம் இடம்- யசோதா, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
7ஆம் இடம்- நிலொான் சொகிலன்,மட்/சென் மைக்கேல்ஸ் கல்லூரி.
8ஆம் இடம்- சிந்துபாசினி, மட்/ விவேகானந்தா மகளிர் ம.வி.
9ஆம் இடம்- ஆண்டர்ஷிகா, திருக்குடும் கன்னியர் மடம் ம.வி.
10ஆம் இடம்- நிமாலினி, மட்/ விவேகானந்தா மகளிர் ம.வி.

இவர்களுக்கான பரிசில்களும் தகுதி பெற்ற மாணவர்களது சான்றிதழ்களும் கழகத்தின் மலர் வெளியீட்டு தினத்தன்று வழங்கப்படவுள்ளது. (யே-8)

## இன்று ஒரு தகவல்

# அந்த நான்கு பேர்

ஒரு ராஜா சிம்மாசனததில் அமர்ந்திருக்கிறார். அவருக்கு எதிரில் பண்டிதர்கள் அமர்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு ஒரு தலைவர் உண்டு. அந்தத் தலைமைப் பண்டிதரைப் பார்த்து ராஜா கேட்டாராம். "இதோ பாருங்கள்...தலைமைப் பண்டிதரே! நான் இப்போது ஒரு நான்கு பேரைப் பறறிக் கூறுவேன். அந்த நான்கு பேரையும் நாளைக்கு நீங்கள் என முன்பு கொண்டு வந்து நிறுத்த வேண்டும். உங்களால் முடியுமா?'' என்றாராம். கூறுங்கள் மன்னா... முயற்சி செய்து பார்க்கிறேன்! என்றார் அவர். ராஜா கூற ஆரம்பித்தார். "நான் கூறப் போகும் முதல் நபர் யார் தெரியுமா? அவன் இங்கேயும் ஆனந்தமாக இருப்பவன்.அங்கேயும் ஆனந்தமாக இருப்பவன் இவன் முதல் ஆள். இங்கே வருந்துபவன் அங்கேயும் வருந்துபவன்.இவன் இரண்டாவது ஆள். மூன்றாவது ஆள் இங்கே மகிழ்சசியாக இருப்பவன். அங்கே வருந்துபவன் நான்காவது ஆள் இங்கே வருந்துபவன் அங்கே மகிழ்ச்சியாக இருப்பவன். இந்த நான்கு பேரையும் நாளைக்கு நமது அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்து நம்முன்பாக நிறுத்த வேண்டும்'' என்று உத்தரவிட்டார் ராஜா.

பணடிதர் யோசித்துப் பார்த்தார். ராஜா கூறிய நான்கு பேர் யார் என்பது புரியவில்லை அவருக்கு. இருந்தாலும் ராஜா கூறியபடி அந்த நான்கு பேரை அழைத்து வராவிட்டால் தண்டனை கிடைக்கும்!. என்ன செய்வது? சரியான கவலையுடன் வீடுவந்தார் பண்டிதர். தனது மகளிடம் விபரத்தைக் கூறினார். மகள் நல்ல புத்திசாலி. "அப்பா... கவலையை விடுங்கள் உங்கள் பிரச்சினையை நான் தீர்த்து வைக்கின்றேன்'' என்றாள். "எப்படி உன்னால் முடியும்? நான்கு பேர் யார் என்று உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார். ''தெரியும்'' என்றாள் அந்தச் சிறுமி. அதன்பின் விளக்கத்தையும் கூறினாள்.

''அப்பா!இங்கே பக்கத்தில் ஒரு ஆசிரமம் உள்ளது. அதில் ஒரு துறவி இருக்கின்றார். அவர் தான முதல் பேர். அவர் இங்கும் மகிழ்வாக இருப்பவர் அங்கும் மகிழ்வாக இருப்பவர். அதோ எதிரில் ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டிருக்கின்றான் பாருங்கள். அவன் தான் இரண்டாவது நபர். அவன் இங்கேயும் வருந்துவான் அங்கேயும் வருந்துவான். நமது வீட்டுக்கு எதிரில் ஒரு பங்களா உள்ளது பாருங்கள். அங்கே ஒரு செல்வந்தன் மோசமான குணம் இங்கே மகிழ்வாக இருப்பவன். அங்கே வருந்தக் கூடியவன் இவன் தான் மூன்றாவது ஆள்.

நான்காவது ஆள் யாரென்றால் அவர் ஒரு முனிவர். கானகத்தில் கடுந்தவம் செய்து கொண்டிருக்கின்றார். கடுமையான தவம் உடல் மிக இளைத்துப் போய் விட்டது. அவர் இங்கே வருந்துகிறார் அங்கே சந்தோஷமாக இருப்பார் இவர்கள் தான் நமது ராஜா கூறிய அந்த நான்கு பேர்'' என்றாள் அந்தச் சிறுமி.

பண்டிதர் யோசித்துப்பார்த்தார் பளிச்சென்று உண்மை புரிநதது. உடனே அந்த நான்கு பேரையும் அழைத்துக் கொண்டு அரண்மனைக்குக் சென்றார்.ராஜா முன் நிறுத்தினார். ராஜாவுக்கு திருப்தி பண்டிதரைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்.

இந்தக்கதை மூலமாக சுவாமி சிவாநந்தர் என்ன கூறுகின்றார் என்றால் இங்கு மகிழ்வாக இருக்க பொருள் வேண்டும்.அங்கே மகிழ்வாக இருக்க அருள் வேண்டும். இருந்தாலும் பொருளை விட அருளே சிறந்தது. அருளாளர்கள் எங்கேயும் ஆனந்தமாக இருப்பார்கள் என்கிறார். எனவே நமக்கு பொருள் நாட்டமும் தேவை. அத்துடன் அருள் நாட்டமும் இருந்தால் தான் எங்கும் ஆனந்தமாக இருக்கமுடியும் என்பது அவரது கருத்து.

ஒரு கணவன் மனைவி அவர்களது வீட்டுக்கு தேவலோகத்திலிருந்து ஒரு ஆள் வந்தான். அவன் அந்தத் தம்பதியரைப் பார்த்துக் கூறினான். "இதோ பாருங்கள் தேவலோகத்திற்கு வந்தால் எப்போதும சந்தோஷ்மாக இருக்கலாம். ஆனால் ஒன்று நீங்கள் இரண்டுபேரில் யாராவது ஒருவர்தான் என்னுடன் வரமுடியும்.யார்வரப் போகிறீர்கள்? முடிவு செய்து கூறுங்கள். தேவலோக வாழ்வு யாருக்கு வேண்டும்? என்று கேட்டேன்.

உடனே அந்தக் கணவன் சிறிது கூடயோசிக்காமல் "என் மனைவிக்காக நான் விட்டுக் கொடுக்கிறேன் அவளை அழைத்துக் கொண்டு போங்கள்" என்றான். "அப்படியென்றால் உனக்குத் தேவலோக வாழ்வு வேண்டாமா? என்று கேட்டான் அந்த ஆள். இதற்கு அந்தக் கணவன் கூறினான். நங்கள் இவளை இங்கிருந்து அழைத்துக் கொண்டு போய்விட்டால் இங்கேயே தேவலோக வாழ்க்கை தானே'' என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜனாதிபதியுடன் சேர்வதில்லையென ஜாதிக சங்க சம்மேளனம் அறிவிப்பு

(கொழும்பு)

காலக்கெடுவிற்கு முன் ஜனாதிபதி தம்மைச் சந்திக்கததவறியமை காரணமாக இனிமேல் அவருடன் எந்தச் சந்திப்பையும் நடாத்தப்போவதில்லை என ஜாதிகஹெல உறுமயவினதும் ஜாதிக சங்க சம்மேளனத்தினதும் தலைவர் வண. எல்லாவல மெதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக சந்திகும் படி காலக்கெடு வழங்கியிருந்தோம். இதனை ஜனாதிபதி செய்யவில்லை.இதனால் தேர்தலில் தனித்து போட்டியிடுவதென தீர்மானித்துள்ளோம் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

எனினும் வியாழன் பி.ப. 3.00மணிக்கு சந்திப்பை நடாத்த ஜனாதிபதி திட்டமிட்டிருந்ததாக அவரது செயலக வட்டாரங்கள் கடந்த புதனன்று அறிவித்துள்ளது. தமது கோரிக்கைகளுக்கு உடன்பட்டால் புதிய கூட்டணிக்கு ஆதரவு வழங்குவது என ஜாதிக சங்க சம்மேளனம் கடந்த திங்களன்று அறிவித்திருந்தது. அத்துடன் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலை நேற்று முன்தினம் ஜாதிகஹெல உறுமய தாக்கல் செய்திருந்தது.

இதேவேளை, இவர்களின் இம்முடிவு தமக்கு அதிர்ச்சி தருவதாக சர்வோதய இயக்கம் தெரிவித்துள்ளது.மகாசங்கத்தினர் கட்சி அரசியலுக்குள் புகுந்துவிட்ட காரணத்தினால் ஆயிரக்கணக்கான வருடங்கள் பாதுகாக்கப்பட்டு வந்த புத்தசாசனம் அழிவை எதிர்நோக்கியுள்ளது. இத்தகைய அழிவு வேலையை செய்யமுயலாதீர்கள் என சர்வோதயத் தலைவர் எ.ரி. ஆரியரட்ன, பிக்குமார்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டைப் பாதுகாக்க அரசியல் அவசியம். ஒரு ஜனநாயக நாட்டின் மதகுருமாரும், ஏனைய மக்களைப் போல அரசியலில் ஈடுபட உரிமையுள்ளவர்கள் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமான அரசியலகள் உள்ளன. ஆனால் எமது நாட்டில் அரசியல எனப் பொதுவாகக் கருதப்படுவது அதிகாரப் பசியுள்ள கட்சி அரசியலையே. இவ்வாறு ஆரியரட்ன தெரிவித்தார். (ந-6)

# எமது வாழ்வியல் உரிமையை வாக்களிப்பு மூலம் உறுதி செய்க!

## மக்களிடம் ஈ.பி.டி.பி. கோரிக்கை

(கொழும்பு)

தமது அபிலாஷைகளைக் கொள்கை ரீதியாக வெளிப்படுத்துகின்ற ஒரு வாய்ப்பாகவே தமிழ மக்கள இந்த முறை வாக்களிப்பில் ஈடுபடுவார்கள் என்று எதீர்பார்க்கின்றோம். ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு காண்பதற்கு தமிழ் மக்கள் தயாராகவே இருக்கின்றனர் என்பதை இந்த வாக்களிப்பின் முடிவுகள் நிச்சயம் எடுத்துக்காட்டும். கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மற்றும் வாழ்வு உரிமைக்கான உத்தரவாதம் என்பவற்றை நிலைநிறுத்தும் வகையில் தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்த வேண்டுமென விரும்புகிறோம். இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி.) விடுத்த செய்திகுறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதை விரைவுபடுத்தவும் அன்றாட வாழக்கைக் கெடுபிடிகளிலிருந்து விடுவிக்கவும் மற்றும் சகோதரப்படு கொலைகள் என்பன இல்லாத இயல்பு நிலையை உருவாக்கவும் தமிழ்மக்கள் இத் தேர்தலின் மூலமாக அங்கீகாரம் வழங்குவார்கள் என்பது நிச்சயம்.

நாடாளுமன்ற அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக தமிழ் மக்களின் மத்தியில் நம்பிக்கையை விதைத்தவர்கள் என்ற வகையிலும், இரு பெரும் தேசிய அரசியல் கட்சிகளோடும் சுமுகமான நட்புறவைப்பேணி தமிழ் மக்களின் நலன்களை நிலை நிறுத்தப்பாடு பட்டுவருபவர்கள் என்ற வகையிலும், ஜனநாயக அரசியல் சக்திகளின் செயற்பாடு குறித்து சர்வதேச சமூகத்தின் பார்வையைத் திருப்பியவர்கள் என்ற வகையிலும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் முக்கியமானது. கடந்த பத்து ஆண்டு கால நாடாளுமன்ற செயற்பாடுகளின் ஊடாக எமது கட்சி முன்னெடுத்த பாதை சரியானதும் நியாயமானதும் ஆகும். இதனாலேயே அன்று முதல் எம்மை விமர்சித்தவர்கள், கேலி பேசியவர்கள், கிண்டல் செய்தவாகள் கூட இன்று எமது பாதைக்கு வந்துள்ளனர்.

எனவே தமிழ் மக்கள் ஆயுதங்களின் அச்சுறுத்தல்கள் குறித்து மிரளாமல், போலியான பசப்பு வார்த்தைகளுக்கு எடுபடாமல், விழிப்புணர்வுடன் வாக்களிப்பில ஈடுபட்டு எமது கட்சிக்கான ஆதரவை மிகத் துல்லியமாக வெளிப்படுத்த வேண்டுகின்றோம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இராசி பலன்

22. 02. 2004

(மாசி 10, ஞாயிற்றுக்கிழமை)

| | | |
|---|---|---|
| துதியை | பிற்பகல் 2.44 | மணிவரை |
| பூரட்டாதி | பிற்பகல் 3.00 | மணிவரை |
| இராகுகாலம் | 5.01-6.31 | மணிவரை |
| சுபநேரம் | 9.31-11.01 | மணிவரை |

**மேடம்**
காரிய அலைச்சல், சயனசுகக்குறைவு, உறவினர் வெறுப்பு, சுபசெலவு.

**இடபம்**
தெய்வ சிந்தை, காரிய சித்தி, பெருமையான சம்பவம், போசனசுகம்

**மிதுனம**
அதிகாரம், நல்ல சம்பவம், எடுத்த காரியங்கள் கைகூடும், பிறர் உதவி.

**கடகம்**
புதிய திட்டமிடல், தேசாந்திர வாசம், காரிய தாமதம், பிதா சிந்தை.

**சிங்கம**
மனக்கிலேசம், காரியத் தடங்கல், பிரயாணபயம், உடல் நலக்குறைவு.

**கன்னி**
களஸ்திர சுகம், தெய்வ சிந்தை, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை.

**துலாம்**
தேக நலன் ,சுவாரஸ்யம், புதிய வீடயம், முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**
புத்திரரால் கவலை, சிறு வியாதி, திடீர் நன்மை, ரோகநிலை.

**தனுசு**
தாய்வழி உறவு, தொழில் சிந்தை, முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு.

**மகரம்**
கலந்துரையாடல், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு.

**கும்பம்**
தன விரயம், காரிய தாமதம், அதிகாரம், சிந்தனை மிகுதி.

**மீனம்**
போசன சுகம், நல்ல காரியம், தெய்வ சிந்தை, நண்பர்கள் சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# சவுதிக்குச் சென்ற 48 இலங்கையர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் தொழில் புரிவதற்காகச் சென்ற 48 இலங்கையர்கள் பல்வேறு இன்னல்களுக்குள்ளான நிலையில் நாடுதிரும்பியுள்ளனர்.

இவர்களில் 35ஆண்களும்,13 பெண்களும் அடங்குகின்றனர்.

போதிய சம்பளம் வழங்கப்படாமல் பல வகையாலும் துன்புறுத்தப்பட்ட இவர்களின் உடல் நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதனால் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் பிரதான அலுவலகத்தில் உள்ள நிவாரண மத்திய நிலையத்திற்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ந-61,10)

# காணாமல் போனோர் வழக்கு விசாரணைகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் வழக்கு விசாரணைகள் சம்பந்தமாக நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மேல் நீதிமன்றத்திற்கு பின்வருவோரை சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் விபரம் வருமாறு,

சோபிகா மல்லிகா 32 புதுவீதி கொய்யாத் தோட்டம, பரமநாதன் புஸ்பவதி 97/12 ஆனந்தன் வடலி வீதி அரியாலை, சின்னத்துரை ஆறுமுகம் 12ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை, பாஸ்கரன் சகுந்தலாதேவி கைதடி வடக்கு கைதடி, செலவரட்ணம் இராசமணி 441,கண்டி வீதி யாழ்ப்பாணம், குமார் கரோலினா 31 பார்க்வீதி குருநகர், தேவதாஸ் சுரேஸ் குமாா 16/6 மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணம், மேரி இரவி லிண்டா சூலிவியா 6/3மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணம். (தி)

# இந்திய மக்களவைத் தேர்தல் ஏப்ரல்,மே மாதங்களில் நடைபெறும்

(சென்னை)

பதின்நான்காவது மக்களவைத் தோதலுக்கான வாக்குப் பதிவு வரும் ஏப்ரல், மே மாதங்களில் நான்கு கட டங்களில் நடைபெறுமென்று தேர் தல் ஆணையம் அறிவித்திருக்கிறது.

நான்கு மணி நேரம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக கூட்டத்துக்குப் பின்னா செய்தியாளர்களிடம் பேசிய துணைத் தேர்தல் ஆணையர் ஏ.என்.ஜா, தேர்தல் திகதிகள விரை வில், உரிய நேரத்தில் அறிவிக்கப் படுமென்றார். தேர்தல் ஆணையர் ரி.எஸ். கிருஷ்ண மூர்த்தி தலை மையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

பள்ளித் தேர்வுகள், வாக்காளர் அடையாள அட்டைகள், மத நிகழ்ச் சிகள் ஆகியவற்றைக் கருததிற் கொண்டு தேர்தல் திகதியை முடிவு செய்ய வேண்டுமெனறு முக்கிய அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணை யரைக் கேட்டுக் கொண்டன.

மிகப் பெரிய மாநிலமான உத தரப்பிரதேசத்தைத் தவிர மற்றைய மாநிலங்களில் தேர்தல்கள் ஒரே நாளில் நடைபெற வேண்டுமென்று அரசியற் கட்சிகள் வலியுறுத்தின.

6 தேசியக் கட்சிகள் மற்றும் 48 பிராந்தியக் கட்சிகளின் தலைவர் கள் கூட்டத்தில் கலந்து கொண்டனா.

மத்திய, மாநில அரசுகளுமெ அரசி யற் கட்சிகளும் தெரிவித்திருக்கும் ஆலோசனைகளைக் கருத்திற் கொண்டு தேர்தல் ஏற்பாடுகளைத் தோதல் ஆணையம் இறுதி செய்து வருகிற்து என்று ஜா தெரிவித்தா.


தேர்தல் நியாயமாகவும் சுதந்திர மாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு தேவையான பாது காப்புப் பணிகள் குறித்து ஆணை யம் பரிசீலித்து வருகிறது என்று கூறினார்.

தேர்தல் திகதிகள் தெரிவிக்கப் பட்ட பின்னரே தேர்தல் நடத்தை விதிகள் அமுலுக்கு வருமென்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கை யில் அவர் கூறினார்.

மக்களவை கடந்த 6ஆம் திகதி கலைக்கப்பட்ட பின்னர் மத்திய அரசு தேர்தல் நடததை விதிகளை மீறும் வகையில், வாக்காளர்களைக் கவரும் வகையில் பல்வேறு சலுகை களையும் திட்டங்களையும் அறி வித்து வருவதாக காங்கிரஸ் கட்சி தேர்தல் ஆணையத்திடம் புகார் கூறி இருந்தது.

மக்களின் வரிப் பணத்தை 'இந் தியா ஒளிர்கிறது' பிரசாரத்துக்காக அரசு தவறாகப் பயன்படுத்துகிறது என்று இடது சாரிக் கட்சிகளும் முன்னதாக எதிர்ப்புத் தெரிவித்தன.

கர்நாடக சட்டப் பேரவைக்கும் மக்களவைத் தேர்தலுடன சேர்த் துத் தேர்தல் நடத்துவதற்குப் பரி சீலித்து வருவதாக அவர் தெரி வித்தார். (து)



'ரீச் பார்த ஸ்டார்ஸ்' என்ற நகை அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சி மும்பையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பிரபல தமிழ் நடிகை சிம்ரன் தனது கணவர் தீபக் பாகாவுடன் வந்து கலந்து கொண்டார். இதே நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நடிகைகள் செலினா ஜெட்லி, மகிமா சவுத்ரி ஆகியோருடன் சிம்ரன் உள்ளார்.

# கோவில்களில் மிருகப்பலி தடைச் சட்டம் ரத்து

கோவில்களில் விலங்குகள் மற் றும் பறவைகளை பலியிடும் சட் டத்தை ரத்து செய்து தமிழக அரசு அவசர சட்டம் ஒன்றைப் பிறப்பித்துள் ளது.

முதலமைச்சரின் பரிந்துரையின பேரில் ஆளுநர் ராம்மோகன்ரால் இந்த அவசரச் சட்டத்தைப் பிறப் பித்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் இத் தடைச் சட்டத்தால் சமயச் சடங்கு களை நிறைவேற்ற இயலவில்லை; இதற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றும் கிராமப்புற மக் கள் கோரிக்கை விடுத்ததையடுத்து அவர்களுடைய மத நம்பிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையில் இநத நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# லற்றிவா நாட்டுக்குப் புதிய பிரதமர் நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை

(லற்றிவா)


ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ அமைபபு ஆகியவற்றில் தொடர்ந்து உறுப்புரிமையைப் பேணு முகமாக லற்றிவா ஜனாதிபதி புதிய பிரதமர் ஒருவரை அடுத்து 24 மணித் தியாலத்திற்குள் நியமிக்கவுள்ளார்.

அரசியல் நெருக்கடிகள் காரணமாக அந்த நாட்டின் ஆளும் கடசிப பிரத மர் தமது பதவியை இராஜினாமாச் செய்திருக்கிறார்.

இதையடுத்து அந்த நாட்டில் அரசியல் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதால் இந்தச் சந்தர்ப பத்தல் ஐரோப்பிய ஒன்றியத்திலும நேடடோ அமைப்பிலும் உள்ள உறுப் புரிமையைத் தக்கவைத்துக் கொள்ளு முகமாக ஜனதிபதி புதிய அரசாங்க மொன்றை அமைக்கத் தீர்மானித் துள்ளார்.

இதற்கமைய அவா பல்வேறு கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடத் தியதாகவும் தெரிவிக்கப்படுகின் றது. (து)



தமிழகத்தில் வறட்சி நிலையை ஆராய வந்துள்ள 9 பேர் கொண்ட குழுவினர் தலைமைச் செயலக த்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினர். பின்னர் இவர்கள் தமிழகத்தின் பல்வேறு இடங்களையும் ஆராய்ந்து துணைப் பிரதமர் அத்வானியிடம் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளனர்.

# தமிழ்நாட்டில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர்கள்

## 26 ஆம் திகதி அறிவிக்கப்படுவார்கள்

(சென்னை)

வரும் மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டிலிருந்து பா.ஜ.க கட்சி சார்பில் போட்டியிடவுள்ள வேட் பாளாகளின் பெயர்களை வரும் 26 ஆம் திகதி கட்சித் தலைமைக்குப் பரிந்துரை செய்யவிருப்பதாக பா.ஜ.க மாநிலத் தலைவர் ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற கட் சியின் மாநில தேர்தல் குழுக் கூட் டத்தின் பின்னர் செய்தியாளர்களி டம் பேசிய அவர், தேர்தல் திகதி வெளி யாகாத வரை அரசு தனது சாதனை களை மக்களுக்குத் தெரிவிபபதில் தவறு இல்லை எனறார். (து)

### கட்சி தாவல் தொடர்கிறது

(சென்னை)

ப.சிதம்பரம் தலைமையிலான காங்கிரஸ் ஜனநாயக பேரவைக கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப் பினர் ரி.ரங்கநாதன் கருணாநிதி முன்னிலையில் நேற்று முன்தினம் தி.மு.க.வில் இணைந்தார். (து)

# லிபியாவுக்கு தொடரும் அமெரிக்க உதவிகள்

லிபியாவுக்குச் செல்வதற்கு தமது நாட்டு மக்களுக்கு விதித் திருந்த தடையை நீக்குவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் 24 ஆம் திகதி தடையை ரத்து செய்வதற் கான அறிவித்தலையும் விடுவிக்க வுள்ளது.


இதேவேளை, லிபியாவுக்கு மனிதாபிமான உதவிகளை வழங் கவும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது. லிபியா அணுவாயுத திட்டத்தை கைவிட்டதை வரவேற்கும் வகை யில் அமெரிக்கா இவ்வாறான தீர் மானங்களை எடுத்துள்ளது.

லிபியாவிற்கு சுகாதாரத்துறை உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வருதுடன் அதற்கான ஆய்வு களை மேற்கொள்ள விசேட குழு வொன்றையும் விரைவில் லிபியா விற்கு அனுப்பி வைக்கவுள்ளது. (து-2)

# ஏழைக்குச் சிகிச்சையளியுங்கள் அப்துல்கலாம் கோரிக்கை

ஏழை நோயாளர்களுக்குச் சிகிச் சையளிப்பதில் தங்கள் நேரத்தின் ஒரு பகுதியைச் செலவிடுவது, கிரா மங்களுக்குச் சென்று ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 20 பேருககுச் சிகிச்சை அளிப்பது உட்பட ஐந்து அம்ச உறுதி மொழியை மேற் கொள்ளுமாறு குடியரசுத் தலை வர் அப்துல் கலாம் இருதய நோய் சிகிச்சை வல்லுநர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

புதுடில்லியில் இந்திய இருதய நோய் சிகிச்சை நிபுணர்கள் சங் கத்தன் ஆண்டு மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய அப்துல் கலாம், ஏழ்மை நிலையில் வாழும் இருதய நோயாளர்களின் சிகிச்சைக்கென தமது நேரத்தின் ஒரு பகுதியை கட்டாயம் ஒதுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (து)



இஸ்ரேல் மற்றும் ஜெருசலேம் இடையே நடந்து வந்த பயங்கரவாத த தாக்குதல்களுக்கு முற் றுப்புள்ளி வைக்கும் விதமாக அதன் எல்லைப் பகுதியில் மிக உயரமான சுவர் எழுப்பப்பட்டுள்ளது. அதன் தோற் றத்தைத்தான் நீங்கள் பார்க்கிறீர்கள்.

# விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தேர்தல் கால ஏமாற்று வித்தை

(சென்னை)

தேர்தல் நேரத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின் சாரம் வழங்கப்படுமெனறு மாநில அரசு அறிவித்திருப்பது அனைத்து விவசாயிகளையும் ஏமாற்றுவதற் கான ஒரு நடவடிக்கை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ஆர்.நல்லகண்ணு கூறி யிருக்கிறார்.

சென்னையில் அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் தேர்தலுக் குப் பின்னர் இது தொடருமா என் பதை அனுபவத்தில் தான் பார்க்க வேண்டுமென்று அவர் தெரிவித்துள் ளார்.

பண அஞ்சல் முறையைக் கை விட்டு தமிழக அரசு மின்வாரியத்துக்கு நேரடியாகப் பணத்தைச் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி யுள்ளார்.

இலவச மின்சாரத் திட்டததை செயல்படுத்த மறுத்துவரும் தமிழக அரசு மின்சார மானியம் என்ற ஓர் இடைக்காலத்திட்டத்தை திசை திருப்பிவருகிறது என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் குற்றம் சாட்டி யிருக்கிறார்.

சென்னையில் அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் இந்த மின் மானியச் சலுகை விஸ்தரிப்புக் குறித்து பட்ஜட்டில் குறிப்பிடப்பட்டா ததைச் சுட்டிக்காட்டியுள்ளார்.(து)

தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. -குறள்

வலம்புரி

# சாக்கடைக்குள் நீச்சல் போடும் புத்தரின் போதனைகள்

இலங்கையில் இனங்களுக்கிடையே பகைமை உணர்வை ஏற்படுத்தி யுத்தத்தை வரவழைத்த பெருமை பௌத்த பீடங்களுக்கும், பௌத்த பிக்குகளுக்கும் உண்டு.

இலங்கை பௌத்த சிங்கள தேசம் என்ற எடுப்பில், அரசியலில் செல்வாக்குச் செலுத்தி ஆட்சியாளர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் காரியத்தை பௌத்த பீடங்கள் காலாகாலமாகச் செய்து வருகின்றன.

இதனால் எல்லா இனங்களையும் - மதங்களையும் சம கண்கொண்டு பார்க்க வேண்டிய சிங்கள அரசுகள், பக்கம் சார்ந்து பௌத்த பீடாதிபதிகளின் கால்களை வருடிக்கொண்டு அவர்கள் இட்ட கட்டளைகளை நிறைவேற்றும் சேவகர்களாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாகவே இலங்கை இன்னமும் அபிவிருத்தியடையாத நாடுகளின் பட்டியலில் முதன்மை இடத்தைப் பிடித்துக்கொண்டு இருக்கிறது. அதுமட்டுமன்றி, தமிழ், முஸ்லிம் மக்களை இலங்கை நாட்டின் பிரஜைகள் என ஏற்றுக்கொள்ளாமல் அவர்கள் சிறுபான்மையினர் எனவும், பெரும்பான்மை இனமான பௌத்த சிங்களத்திற்கு அடிமையானவர்கள் எனவும் கருதி அடக்கி ஆளப்பட்டனர்.

தன்னுயிர் போல் மன்னுயிரையும் மதிக்குமாறு போதனை செய்த கௌதம புத்தபிரானின் சீரிய சிந்தனைகள் இலங்கையில் செல்லாக் காசாகின. பக்கபிரானின் போதனைகளை இலங்கை மண்ணில் விதைக்கப் புறப்பட்ட பிக்குகள் மொட்டை அடித்து காவி தரித்து வேசம் போட்டனரே தவிர புத்தபிரானின் பாதையில் சென்றாரல்லர்.

இவர்கள் தமது மதப்பணியை நன்றே செய்திருப்பின் இலங்கையில் இன யுத்தம் என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்க மாட்டாது. மாறாக எங்கும் இன ஒற்றுமை மலர்ந்திருக்கும். நாடு செல்வச் செழிப்போடு திகழ்ந்திருக்கும்.

என்செய்வது? கெட்டகேடு, பௌத்த பீடங்களின் சைகைகளுக்கு தகிட தத்தோம் போடும் சிங்கள ஆட்சியாளர்களால் நாடு இன்று சர்வதேசத்திடம் பிச்சாடன பாத்திரம் ஏந்தித் திரிகின்றது.

இந்நிலை ஏன் என்ற கேள்வி, பேரினம் சார்ந்த புத்திஜீவிகளிடம் இன்னமும் ஏற்படாமல் இருப்பது துரதிஷ்டமாகும்.

உலகில் எந்த ஒரு நாடு மதம் சார்ந்து தனது ஆட்சியை வழிப்படுத்துகிறதோ - தனது மதத்திற்காக பிற மதங்களை இம்சைப்படுத்துகிறதோ அந்த நாடு உருப்பட்டதாக வரலாறு இல்லை. இஃது இலங்கைக்கு சாலவும் பொருந்தும்.

அவ்வகைளில் இலங்கையில், இன ஒற்றுமை ஏற்பட்டு, சமாதானம் நிலைக்க வேண்டுமாக இருந்தால், பௌத்த பீடங்களின் கட்டுக்களில் இருந்து அரசு விடுபட வேண்டும். அத்தகையதோர் நிலைமை முழுமையாக ஏற்படாத போதிலும் மிகச் சிறிய அளவிலேனும் பிரதமர் ரணிலின் ஆட்சியில் விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் மூலமாக ஏற்பட்டிருந்தது.

ஆயினும் அந்நிலைமை நீடித்து நிற்க முடியாது போக, எதிர்காலத்தில் தமது அதிகார பலத்திற்கு ஆபத்து வந்துவிடுமோ என ஏங்கிய பௌத்த பிக்குகள் நேரடியாகவே தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

இறைவனின் பெயரால் சமயப் பணி செய்து, இந்த மண்ணில் ஒழுக்கத்தையும் நற்பழக்க வழக்கங்களையும் விதைத்து மக்கள் சமூகத்தை நன்னெறியில் வழிநடத்தப் புறப்பட்ட புத்த பிக்குகள் இப்போது தங்களின் இலக்கு - கடமை - என்பனவற்றை மறந்து அரசியல் சாக்கடைக்குள் நீந்தத் தொடங்கிவிட்டனர்.

குளிக்கப்போய் சேறு பூசிய கதையாக பௌத்த பிக்குகளின் நிலைமை மாறிவிட்டது. மதகுருமார் தேர்தலில் குதிப்பதும் மேடை ஏறிப் பொய்ப் பிரசாரம் செய்வதும் இந்த நாட்டிற்கு ஏற்படப்போகின்ற அழிவுகளின் சில அறிகுறிகளாகும்.

இதனை உணர்ந்து சிங்கள மக்கள் இவர்களுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும். தவறும் பட்சத்தில் பௌத்த பீடங்களும் புத்த பிக்குகளுமே பிரமச்சாரிய ஆட்சி நடத்துவர்.

# பொது மக்களைப் பொதி மாடுகளாக எண்ணும் இலங்கை அரசியல்வாதிகள்

**வாக்காளர் கருத்துக்களம்**

'ருசிகண்ட பூனை அடுப்பங்கரையை விட்டு அப்புறம் அகலாது' எனத் தமிழிலே வழங்கிவரும் பழமொழி, அனுபவித்த பாராளுமன்ற சுகத்தை விட்டுவிட மனமின்றிச் சுற்றிச்சுற்றிப் பாராளுமன்றக் கதிரைகளை நோக்காகக் கொண்டு அலைந்து திரியும் அரசியல்வாதிகளுக்குப் பொருந்தும்.

பாராளுமன்றத்திற்குச் சென்று ஆண்டனுபவித்தவர்களால் ஒரு கண நேரமேனும் அதை இழந்துவாழ முடியாது என்பதால்தான் எப்படியாவது பாராளுமன்றத்திற்குள் நுழைந்துவிடவேண்டும் என்று தலைகீழாகத் தவம் செய்கிறார்கள்.

இன்றைய சூழலில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, மற்றைய அரசு உத்தியோகத்தர்களைப் போல மாதாந்தச் சம்பளத்தையும் மற்றும் சலுகைகளையும் பெறும் ஒரு தொழிலாக மாறிவிட்டது.

இங்கு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து உழைத்துக்கொண்டு தங்கள் பிள்ளைகளையும், குடும்பத்தையும் வெளிநாட்டில் சொகுசாக வாழ வழியமைத்துக் கொடுத்துள்ள அரசியல்வாதிகள்தான் மலிந்து காணப்படுகிறார்கள்.

இந்தியாவிலும், இதர கடல்கடந்த நாடுகளிலும் சொந்த வீடுகள் வாங்கித் தமது குடும்பத்தினரைக் குடியமர்த்தி, தமது பிள்ளைகளுக்குத் தரமான கல்வி பெறுவதற்கான வசதிகளையும் செய்து கொடுத்துவிட்டு, இங்கு வந்து நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் தங்கள் சுகபோகங்களையெல்லாம் தியாகம் செய்கின்ற உத்தமர்கள் போலக் கண்ணீர் வடிக்கும் எத்தனையோ அரசியல்வாதிகள் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

வடபுலத்தில் இருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் எத்தனைபேர் இங்கேயே குடும்பத்துடன் குடியிருந்து தங்கள் வெற்றிக்காகப் பாடுபட்ட வாக்காளர் பெருமக்களின் சுகதுக்கங்களில் பங்குபற்றியிருக்கிறார்கள்?

காலத்துக்குக் காலம் பெய்யும் பருவமழைபோல தங்களுக்குத் தேவையான நேரத்தில் திடீர் விஜயங்களை மேற்கொண்டு மேடைகளிலே வீராவேசமாக முழங்கும் அரசியல்வாதிகள், வாக்காளப் பொதுமக்களை ஏதும் அறியாத அறிவிலிகள் என்று எத்தனை காலத்துக்கு எண்ணிக்கொண்டிருக்க முடியும்?

1980களில் இடம்பெற்ற வகுப்புக் கலவரத்தையடுத்து அரசியல்யாப்பின் 6ஆம் வாசகத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தை அடுத்து எமது அரசியல்வாதிகள் குடும்ப சமேதரராகக் காணாமல்போன நேரத்திலும், அதற்குப் பின்னும் தங்களுக்கு வாக்களித்த பொதுமக்களை 'அம்போ' என்று கைவிட்டுவிட்டுப் போகிறோமே என்று சற்றாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறார்களா?

பாராளுமன்ற உறுப்பினர் பதவி இன்று நல்ல திரட்டிய சம்பளத்தை அளிக்கும் ஒரு தொழிலாக மாறிவிட்டது என்பதன் உண்மையை அறியவேண்டுமானால், சற்றுப் பின்நோக்கி எமது பார்வையைச் செலுத்தவேண்டும்.

1960களுக்கு முன் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இப்போதுள்ளவர்கள் ஆண்டனுபவித்துவரும் சலுகைகள் இருந்தது கிடையாது. அவர்களது மாதாந்த அலவன்ஸ் 600ரூபாதான். சகல தேவைகளுக்கும் தமது சொந்தப் பாவிப்பு வாகனங்களுக்கு தங்கள் சொந்தச் செலவிலேயே எரிபொருள் ஊற்றிப்பாவித்தார்கள்.

ஆனால் இன்று, ஒரு பாராளுமன்ற உறுப்பினரது சம்பளம் என்னவெனத் தெரியுமா? சமீபத்தில் ஆங்கில ஏடொன்றில் இந்த விபரங்கள் பற்றி ஒருவர் எழுதியிருக்கிறார்.

ஒரு பா.உ.இன் மாதாந்தச் சம்பளம் ரூபா 22,100/-. அதைவிடப் படிகளாக பொழுதுபோக்குப்படி ரூபா1000/-, எரிபொருள்படி ரூபா7500/-, செல்போன்படி ரூபா2000/-, கூட்ட அமர்வுகளில் கலந்துகொள்வதற்கான படி ரூபா4000/-,(பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகத்தான் சம்பளமாக ரூபா22,100/- வழங்கப்படுகிறது என்பது வேறுகதை) சாரதிகளுக்கான படி ரூபா3500/-.

இதைவிட சர்வதேச அழைப்பு வசதிகளுடன்கூடிய தொலைபேசி, சுங்கவரியின்றி இறக்குமதிசெய்யப்பட்ட போட்டோப்பிரதி இயந்திரம், சுங்கத்தீர்வையற்ற தட்டச்சு இயந்திரம், கணனி, 30,000 அமெ.டொலர் பெறுமதியான ஆடம்பரக்கார், இறக்குமதி செய்வதற்கு அனுமதி (இங்கே வாக்களித்தவர்கள் கந்தையற்ற வழியின்றிக் கஞ்சிக்கு அலைந்து கொண்டிருக்கின்றார்கள்) கொழும்பு நகருக்கு 25 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு மாதாந்தம் ரூபா1000/- வாடகையில் மூன்று அறைகளுடன் கூடிய இரண்டடுக்கு மாடிவீடு, சலுகைக்கட்டண அடிப்படையில் காலை, மாலை உணவு, தேநீர், சிற்றுண்டி, ஐந்துவருடகால சேவைக்குப்பின் ஓய்வூதியம். ஐந்து வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன் விலகிச் சென்றால் 4இலட்சம் முதல் 5இலட்சம் வரையான இழப்பீட்டுக் கொடை, தபால் செலவுப்படி மாதாந்தம் ரூபா7500/-, இலவச மருத்துவவசதி, 5முறை வெளிநாட்டு விஜயங்களின் செலவு அரச பொறுப்பில் என எண்ணில் அடங்காத சலுகைகள் இப்பதவிக்கு உண்டு.

இத்தகைய சலுகைகளையெல்லாம் காலம் காலமாக அனுபவித்துவரும் நமது அரசியல்வாதிகள் இவற்றை விட்டுக்கொடுக்க மனமொருப்படுவார்களா?

இதனாலேதான் தள்ளாடும்வயதிலே கூட பாராளுமன்றத்திற்குள் நுழைந்துவிட இத்தனை தகடுதத்தங்களையும் நமது நாட்டு அரசியல்வாதிகள் செய்கின்றார்கள் போலும்.

**பொ.இ.துரை**
**யாழ்ப்பாணம்.**

## தேர்தல்களம்

# அற்ப சொற்ப சலுகைகளுக்கல்ல தமிழரின் உரிமைக்கே போராடுவோம்

**-ரவிராஜ்-**
(கொழும்பு)

அரசாங்கத்தினால் வழங்கப்படும் அற்பசொற்ப சலுகைகளுக்காக அமைச்சுப் பதவிகளைப் பெற்று அரசுக்கு நாம் வால்பிடிக்கமாட்டோம்.

மாறாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்காக அவர்களின் உரிமைப் போராட்டத்திற்காக தனிக் குழுவாக இயங்கிப் பாராளுமன்றில் குரல் கொடுப்போம். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுதியான கொள்கையுமாகும்.

இவ்வாறு முன்னாள் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ந.ரவிராஜ் ஊடகம் ஒன்றுக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தமிழ் மக்கள் ஒற்றுமையாக ஓரணில் நின்று தமது உரிமைகளைக் கோரி வருகின்றனர். இதனைக் கடந்த காலங்களில் சர்வதேச சமூகத்திற்கும் தென்னிலங்கையில் உள்ள பேரினவாத சக்திகளுக்கும் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இவர்களின் இந்த நிலைமை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டுமானால், தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் கட்சிகளுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் அதிகபடியான வாக்குகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கும் வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றது.

ஏனெனில், கடந்தகாலத் தேர்தல்களிலும் பார்க்க இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ்மக்களின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தும் வகையில், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வை ஏற்படுத்தி அவர்களின் ஆலோசனைகளையும் பெற்று வருகின்றோம்.

குறிப்பாகச் சொல்லப்போனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்களிப்பும் தேர்தலில் இருக்கின்றது.

கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் போது எமககும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித நேரடித் தொடர்பும் இருக்கவில்லை.

அந்நிலையில்கூட தமிழ்மக்கள் எமக்குத்தான் அதிக வாக்குகளை வழங்கிப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினார்கள்.

எனவே, எதிர்வரும் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நாங்கள் நெருக்கமான முறையில் நல்லுறவை வளர்த்துக்கொண்டிருப்பதால் தமிழ்மக்கள் எமக்கே அதிக வாக்குகளை வழங்குவார்கள்.

இதற்கிடையில், முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் 'இம்முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடமாட்டேன்' என அறிவித்துள்ளார்.

உண்மையிலேயே அவர் மக்களுக்கு நல்ல முறையில் சேவையாற்றி வந்தவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கு இணங்கி எம்மோடு ஒற்றுமையாகச் செயற்பட்டவர்.

எனவே, அவரது ஆதரவாளர்களும் எமக்கே அதிகமான வாக்குகளைப் போடுவார்கள் என்றார். (யே-61,10)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

அமைதியையும் ஆசிகளையும் தனது எதிர் விளைவாகக் கொண்டுவராத அன்புச் செயல்கள் உலகத்தில் எதுவுமே இல்லை.

சாகின்ற நிலையிலும்கூட ஒருவருக்கு அவர் யார் எப்படிப்பட்டவர் என்ற கேள்வி கூடக் கேட்காமல் அவருக்கு உதவி செய்வதுதான் கர்மயோகம்

சுவாமி விவேகானந்தர்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

# தமிழ்மக்களை அடகுவைப்போருக்கு வரும் தேர்தலில் பாடம் புகட்டுங்கள்

## மயோன் முஸ்தபா தெரிவிப்பு

(கொழும்பு)

மலையகத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ள இந்நிலையில், முஸ்லிம் கட்சிகள் எல்லாம் ஒன்றோடு ஒன்று முரண்பட்டுக் கொண்டு பிளவுபட்டிருப்பது முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஒரு சாபக் கேடாகும்.

இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா.

4 முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்கள் ஒன்றிணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மரச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானித்து விட்டு, பின்னர் அந்தத் தீர்மானத்தைக் கைவிட்டு விட்டமை குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்;

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் தனித்து நின்றே தேர்தலில் போட்டியிட வேண்டும் என அடம்பிடிக்கிறார்கள். இவர்களின் கடுமையான போக்குக்கு அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவருமான ரவூப் ஹக்கீமும் தாளம் போடுகிறார்.

முஸ்லிம் கட்சிகளின் பிளவுக்கு முக்கிய காரணம் இவர்கள் என்றே கூறவேண்டும்.

இவர்கள் இவ்வாறு ஒற்றுமைப்படாது தங்களின் சுய இலாபங்களுக்காக செயற்பட்டு வருவதால் முஸ்லிம மக்களின் பிரச்சினையை ஒருமித்த குரலில் கருத்துக் கூறி தீர்வு காணமுடியாதிருக்கின்றது.

இவ்வாறு ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு திசையில் நின்று கொண்டு எவ்வாறு முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாக்கப் போகின்றார்கள்? என்பதுதான் தற்போது முஸ்லிம் மக்களிடையே நிலவி வரும் சந்தேகம்.

இதற்கிடையில் தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ) இனவாதக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து கை தட்டுகின்றது. இக் கட்சிக்குப் பக்கபலமாக நின்று கை தட்டுவதற்கு மேலும் சில முஸ்லிம் எம்பிக்கள் முயற்சித்து வருகின்றனர்.

"சிறுபான்மை இனத்தவரை பூண்டோடு அழிக்க வேண்டும்" "அவர்களுக்கு எதுவும் கொடுக்கக கூடாது" என கூச்சலிடடு வந்த ஜே.வி.பி இன்று ஜனநாயகத்தில் இறங்கி "ஐக்கிய மககள் சுதந்திர முன்னணி" என்ற பெயரில் தேர்தலில் போட்டியிட்டு சிறுபான்மை இன மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வர முயலுகின்றது.

சமாதானத்தை விரும்பாது சாவு மணி அடித்துக் கொண்டு இந்த இனவாத சக்திகள் எல்லாம் ஆட்சிப் பீடம் ஏறினால் இலங்கை யில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என்பதை நான் சொல்லித்தான் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

குறிப்பாக தமிழ் மக்கள் இதனை நன்கு உணர்ந்திருப்பார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி அவர்களின் உணர்வுகளை நசுக்கி வந்தவர்கள் யார்? என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

எனவே தமிழ் பேசும் மக்களாகிய தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் யார் ஆட்சி பீடம் ஏற வேண்டும் என்பதை நன்கு யோசித்து முடிவெடுத்துக கொள்ள வேண்டும்.

அத்துடன் சகல இன மக்களும் தமக்கிடையே ஒற்றுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளின் தேவையற்ற விமர்சனங்களுக்கு இரையாகக் கூடாது. அரசியல்வாதிகளின் விசமத்தனமான பிரசாரங்களினாலும் விமர்சனங்களினாலும் தான் இனங்களுக்கிடையில் குரோதங்கள் வளர்ந்து வந்தன என்பது யாவரும் அறிந்த விடயமே.

அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காக அரசுடன் அல்லது பேரினவாத சக்திகளுடன் ஒட்டிக் கொண்டிருந்த தமிழ் பேசும் மக்களை அடகு வைக்க முயலும் கட்சிகளுக்கு ஆப்பு வைக்க மக்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என்பதை மக்கள் மறந்து விடக் கூடாது என்றார். (யே-61,10)

---

## இளம் தாய் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

இளம் குடும்பப் பெண் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீசாலை மேற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு அருகில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாபப் பெண் மூன்று பிள்ளைகளின் தாய் என்பது குறிப்பிடத்தக்கது. (த-29)

## கிளி.விபத்தில் இளைஞன் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 55 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரான வண்ணார்பண்ணை லோட்டஸ் வீதியைச் சேர்ந்த இராமலிங்கம் மனோகரன் (வயது 24) இளைஞரே பலியானவராவார். (ந)

## விரிவுரைகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானபீட புகுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை திங்கட் கிழமை ஆரம்பமாகின்றது. (த-21)

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P: 0602212472

## ஆன்மீக விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று

(கல்வியங்காடு)

வடபிராந்திய ஸ்ரீசத்யசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் மனித மேம்பாட்டு கல்விப் பயிற்சி நிலையத்தில் ஆன்மீக விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

சமூகத்தில் மனித மேம்பாடு என்னும் தலைப்பில் ஸ்ரீ சத்ய சேவா நிறுவனத்தினர் கருத்தரங்கை நிகழ்த்தவுள்ளனர். (த-74)

## சாவகச்சேரி தபாலகம் நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள புதிய தபாலகம் நாளை திங்கட் கிழமை முதல் ஆடம்பரம் எதுவும் இன்றி சம்பிரதாயபூர்வ மாக மக்கள் பாவனைக்கு திறந்து விடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டின் தபால் சேவை தொடர்பான குறைபாடுகளை ஆராய்வதற்கு நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த தபால் மா அதிபர் கே.ஏ.எஸ்.சேனதீர சாவகச்சேரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தபாலகத்தை மக்கள் பாவனைக்கு திறந்து வைப்பதற்கான ஆலோசனையை வழங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல் யாழ்.பிரதம தபாலகமும் ஆடம்பரம் எதுவும் இன்றி மக்கள் பாவனைக்கு விரைவில் திறந்து விடப்பட இருப்பதாக யாழ்.தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

---

## எமது கட்சியின் ...

என நீங்கள் கருதியிருந்தால் 3 அமைச்சுக்களைப் பொறுபபேற்ற உடனேயே பொதுத் தேர்தலை நடாத்தாமல் 3 மாதங்கள் வரை காத்திருந்தது ஏன்?

3) 3 அமைச்சுக்களை பொறுப்பேற்ற பின்னரும் கூட நீங்கள் ஐ.தே.மு. அமைச்சர்களைவிட வேறுபட்டு எதுவும் செய்யவில்லை. அதன் பின்னர் உங்கள் கொள்கைகளை ஏன் மாற்றிக் கொள்ளவில்லை? நீங்கள் செய்தது சரி என்பதை அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற உடனேயே ஏன் மக்களிடம் சொல்லவில்லை?

4) போர் நிறுத்த உடன்படிக்கை விடயத்தில் நீங்கள் அதிருப்தி கொண்டிருந்தால் அது நாட்டின் ஆட்புல ஒருமைப் பாட்டிற்கு அச்சுறுத்தல் என நீங்கள் கருதியிருந்தால் எதுவும் செய்யாமல் 2 வருடங்கள் வரை காத்திருந்தது ஏன்?

5) இத்தேர்தலில் சமாதானமே முக்கிய விடயம், சமஷ்டி கட்டமைப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கொள்கையுடைய ஜே.வி.பியினருடன் சமஷ்டி அமைப்பே உருவாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையுடைய நீங்கள் எவ்வாறு சமரசத்தை மேற்கொண்டீர்கள்? தமிழர்களுக்கு எதிரான, சிங்கள பேரினவாத சக்திகளை மாக்ஸிஸவாதிகளைக் கொண்ட ஒரு அரசாங்கத்தை அமைத்துக் கொண்டு பேச்சுக்களை நடாத்த புலிகளை எவ்வாறு அழைப்பீர்கள்?

6) எதிர்வரும் தேர்தலில் ஜே.வி.பி., சுதந்திரக்கட்சி கூட்டணி ஆட்சியமைத்தால், அமைச்சரவையின் அளவை குறைக்க வேண்டுமென அண்மையில் தெரிவித்திருந்ததன்படி உங்களது அரசாங்கத்தில் எத்தனை அமைச்சரவை அமைச்சர்களையும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களையும் வைத்துக் கொள்வீர்கள்?

7) ஐ.தே.மு. அரசாங்கத்தின் பிரதமர், ரணில் விக்கிரமசிங்க என்பதை மக்கள் அறிவார்கள். ஜே.வி.பி-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைந்தால் யார் பிரதமராக நியமிக்கப்படுவார் என்பதை அறிய அவர்களுக்கு உரிமை உண்டு. நீங்கள் எதனையும் மறைக்கவில்லை என்பதை அவர்கள் நம்பவேண்டும் என நீங்கள் விரும்பினால் உங்கள் தரப்பு பிரதமர் யார் என்பதை தெரியப்படுத்துங்கள்?

8) ஐ.தே.க அரசாங்கத்துடன் சகவாழ்வை ஏற்படுத்த விரும்புவதாக சுதந்திரதின உரையில் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் 48 மணி நேரத்திற்குள் பாராளுமன்றை கலைத்துள்ளீர்கள். இப்பொழுது ரணிலுடன் இணைநது செயற்பட முடியாது எனக் கூறுகிறீர்கள் சக வாழ்வை விரும்பிய நீங்கள் தற்போது மனமாற்றம் அடைந்துள்ளீர்கள் உண்மையில் புதிய தீர்மானம் ஒன்றை எடுத்திருந்தீர்களா? அல்லது நாட்டு நலனிற்கு முன்னால் அதிகாரப் பசி என்னும் சுய நலனுக்காக இவ்வாறு நீங்கள் கூறியதாக நாம் எடுத்துக்கொள்ளலாமா?

9) அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமையும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையும் நயவஞ்சகத்துடன் மேற்கொள்ளப்பட்டன. இதனால் நாட்டிற்கு பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது. சர்வதேசத்தின் நம்பிக்கை குறைவடைந்து கிட்டத்தட்ட சமாதான செயற்பாடுகள் முறிவடையும் நிலைக்கு காரணமாகிவிட்டன என்பதை நீங்கள் மறுக்கிறீர்களா?

10) நீங்கள் எதிர்வரும் தேர்தலில் ஆட்சியமைக்க முடியாவிட்டால் மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு சாதாரண இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஐ.தே.முயின் செயற்பாடுகளுக்கு அனுமதியளிப்பீர்களா?

இவ்வினாக்களுக்கு திருப்தியான பதிலளிக்க ஜனாதிபதி தவறினால் இவ்விடயங்களை அவர் கண்டிப்புடன் மேற்கொள்ளவில்லை என்பது புலனாகும். பின்னர் ஜனநாயகத்திற்கு விரோதமாக சர்வாதிகாரமாக அவர் நடந்துகொண்டதற்காக தனது பதவியை ராஜினாமாச் செய்து ஒரே நாளிலேயே ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும் நடாத்தி மக்கள் எத்தகைய அரசாங்கத்தை விரும்புகிறார்கள் என்பதை தீர்மானிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-6)

## ஒருகோடி...

யாளரிடம் இருந்து நகைப் பையை பறித்தெடுத்த பிரஸ்தாப கொள்ளையர்கள் அங்கிருந்து வேகமாகத் தப்பியோடித் தலைமறைவாகினர்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காலில் படுகாயமடைந்தார் அந்நேரம் வீதியில் நின்று கொண்டிருந்த சிறுவனான சத்தியசீலன் துவாரகன்(வயது15) என்பவரின் பாதத்தையும் துப்பாக்கிக் குண்டு பதம் பார்த்தது.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

பிரஸ்தாப கொள்ளையர்கள் தமிழில் நன்றாக உரையாடியதாகவும் அவர்கள் கறுப்புத் துணியினால் முகத்தை மூடிக் கட்டியிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

மேற்படி கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் மற்றும் இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-16,3,29)

## ஐ.தே.கட்சி...

படவுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்பு மனுக்கள் நாளை திங்கட்கிழமை தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு பூர்த்தியடைந்திருப்பதாகவும் அத்துடன் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், வடக்கு கிழக்கு மாகாணத்திலும் தமது முன்னணி சார்பாக வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளது. (த)

## ரணில்...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பலப்படுத்த வேண்டும்.

நாட்டில் உண்மையான சமாதானத்தை அடைவதற்கு இதுதான் தகுந்த வழி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசில் அமைச்சராகவிருந்த அதாவுல்லவும் மற்றும் மூவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஸ்ரீலங்கா...

பாட்டையும் மீறியமையும் மாற்று அரசியல் கட்சி ஒன்றுடன் ஒப்பந்தம செய்து கொண்டமையும் உட்பட பல குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. இது குறிதது ஆராய்ந்த பின்னர் இவ்விருவரையும் கட்சியிலிருந்து நீக்குவது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் தெரிவித்தார். (ம)

## க.தொ.ச...

செய்து பெரும் அர்ப்பணிப்பின் தமிழர் தேசியத்தைக் கட்டியெழுப்பி, எதிர்வரும் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் ஒன்றுபட்டு ஒரு கொள்கையில் ஒருமித்து நின்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலம் தமது அரசியல் அபிலாசைகளை சர்வதேச சமூகத்தின் முன்னால் நிலைநிறுத்த முனைந்து நிற்கின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் சிங்கள பேரினவாத சக்திகளுக்கு துணை போகும் துரோக சக்திகளின் சதி நோக்கங்களுக்கும் தாங்களும் பலியாகாது தமிழினத்தையும் பலியாக்காது எதிர்வரும் தேர்தலில் ஒதுங்கி தாங்கள் விட்டுக்கொடுக்க வேண்டுமென தமிழினம் சார்பாகவும், கடற்றொழிலாளர்கள் சார்பாகவும் வேண்டி நிற்கிறோம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## தனியாருக்கு...

மேலும் தெரிவிக்கையில்;

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொருளாதாரக் கொள்கையின் பிரகாரம் அரச, தனியார் துறையினர் மூலம் உற்பத்தியை மேம்படுத்துவதே முக்கிய நோக்கமாகும். ஊழல், வீண் விரயம், சமூக அநீதி ஆகியவற்றை ஒழிக்கும் நோக்கத்தையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கொண்டுள்ளது. அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்தும் பேணப்படும். இன்றைய சூழ்நிலையில் எந்தவொரு சமூகமும் யுத்தத்தை விரும்பவில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு, விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் ஜே.வி.பியின் தவைர் சோமவன்ச அமரசிங்க, கலாநிதி சரத் அமுனுகம, விமல் வீரவன்ச ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (ம)

## பொதுத்...

அத்துடன், கடந்த தேர்தல் காலத்தில் முஸ்லிம் இளைஞர்கள் பலர் இம்மாவட்டத்திலேயே படுகொலை செய்யப்பட்டதோடு, அதற்கான சூத்திரதாரிகளான அனுருத்த ரத்வத்தையும், அவரது புதல்வர்களும் கைது செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இந்த வழக்கு இன்னமும் முடிவடையாத நிலையில், பாதுகாப்புக் காரணங்களை கருத்திற் கொண்டே ஜனாதிபதியால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்குத் தேசிய பட்டியலில் நியமனம் வழ்ங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே-18)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.